Annual Subscription Rs. 60/-
Price Rs. 5/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்


மலர் - 21 இதழ் - 3 மார்ச் 2008



கிறிஸ்துவின் சபை
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
✆ 04257 - 230030 Cell : 98427 - 30382 , 98428 - 30382
E-mail : kangayamcofc@eth.net

# BIBLE MEDITATION

## TV PROGRAM




## ஆசானின் அறிவுரையில் ...

1. ஆசிரியர் உரை ........ 1
2. ஆவியின் ஒருமை ........ 11
3. பெண்கள் பகுதி ........ 15
4. வாலிபர் பகுதி ........ 20
5. சிறுவர் பகுதி ........ 23
6. விசுவாசத்தின் அடிப்படைகள் ........ 25
7. இரத்த சாட்சிகள் ........ 30

// THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 21 MARCH - 2008 Issue - 3

ஆசிரியர் உரை

# தாகமாயிருக்கிறேன்

இப்பூவுலகில் மனிதர்களாகப் பிறந்து வாழ்ந்து கொண்டிருக்கும் எல்லோருக்குமே பொதுவானது என்று சில காரியங்கள் உண்டு. பொதுவானவைகள் என்று சொல்லப்படுபவைகளுக்கு விதிவிலக்காக யாருமே இருக்க முடியாது. அரசனாக இருந்தாலும், ஆண்டியாக இருந்தாலும் அது தான் உண்மை. அப்படிப் பொதுவானவைகள் என்று சொல்லப்படு பவைகளில் பிரதானமாக பசியையும், தாகத்தையும் குறிப்பிடலாம். இந்தப் பசியும், தாகமும் இப்பூவுலகில் மானிடராய்ப் பிறந்து வாழ்ந்த தேவ மைந்தனாகிய நமதாண்டவரையும் விட்டு வைக்கவில்லை. இப்படி பசி, தாகம் போன்றவை எல்லோருக்கும் பொதுவானதாக இருக்கிறபடியால், ஒருவன் பசியாயிருக்கிறேன் என்று சொல்வதிலோ, தாகமாயிருக்கிறேன் என்று சொல்வதிலோ ஆச்சரியப் படுவதற்கு ஒன்றுமில்லை!.

ஒருவேளை, தாகமாயிருக்கிறேன் என்று ஒருவன் சொல்வதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லையென்பது உண்மையாக இருந்தாலும், ஒருவகையில் **தாகமாயிருக்கிறேன்** என்ற வார்த்தை கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக, கருத்துச் செறிவு மிக்க வார்த்தையாகவும், கவனிக்கத்தக்க வார்த்தையாகவும், சொல்லப்படும் வார்த்தையாகவும், பேசப்படும் வார்த்தை யாகவும் மாறியிருக்கிறது. ஆம், இவ்வார்த்தை மிகுந்த செல்வாக்குள்ள ஒன்றாக மாறி, ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. ஒருவேளை, இவ்வார்த்தை விசேஷமாகப் பேசப்படுகின்ற தபசு காலம் அல்லது லெந்து நாட்கள் என்று சொல்லப்படுபவைகள் வேதாகம அங்கீகாரத்தைப் பெறாதவைகளாக இருந்தாலும், தாகமாயிருக்கிறேன் என்ற இவ்வார்த்தை வேதாகமத்தில் இல்லாத ஒரு வார்த்தையல்ல. இயேசுவானவரின் சிலுவை

வார்த்தைகளில், ஒன்றாக இவ்வார்த்தை இருக்கிறபடியால், உலகெங்கிலும் இவ்வார்த்தை பேசப்பட்டு வருகிறது. சிலுவை வார்த்தைகளில் இது ஐந்தாவது என்று பெரும்பான்மையான கிறிஸ்தவ சமுதாயத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

பொதுவாக, ஒரு வார்த்தை முக்கியத்துவம் பெற்று, ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகிறதென்றால், அதற்கு அவ்வார்த்தையின் சொல்லர்த்தம் மாத்திரம் காரணமாக இருக்க முடியாது. மாறாக, இவ்வார்த்தை யாரால் பேசப்பட்டது, எப்பொழுது பேசப்பட்டது, எங்கே பேசப்பட்டது, ஏன் பேசப் பட்டது போன்றவைகளும் கணக்கிலெடுத்துக் கொள்ளப்படும். இதனடிப் படையில் நாம் கவனித்தால், தாகமாயிருக்கிறேன் என்ற இயேசுவின் சிலுவை வார்த்தை மிகவும் சிறப்புக்குரியதாயிருந்து, பேசப்படுவதற்கு ஏற்றதாகவும், பிரசங்கிக்கப்படுவதற்கு உகந்ததாகவும் மாறியிருக்கிறது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

இயேசுவானவர், தாகமாயிருக்கிறேன் என்று சொன்னதின் சரியான பின்னணியை நாம் புரிந்து கொள்ள வேண்டுமானால், அதற்கு முந்தின சிலுவை வாக்கியத்தின் தன்மையைத் தெரிந்து கொள்ள வேண்டும். என் தேவனே, என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்? என்று தமிழில் மொழி யாக்கம் செய்யப்பட்டிருக்கும், மூல வார்த்தைகளாகிய, "**எலோயீ, எலோயீ, லாமா சபக்தானி**" என்று அப்பொழுது சொன்னார் (மாற்கு. 15:34). அவர் எலோயீ எலோயீ என்று சத்தமிட்டது, கூடியிருந்தவர்களுக்கு எலியா, எலியா என்று கூப்பிட்டதாகக் கேட்டிருக்கிறது. சிலுவை வார்த்தைகள் என்று வர்ணிக்கப்படுபவைகளுள் மிகவும் சர்ச்சைக்குரிய வாக்கியம் இதுதான். அதாவது, அவர் என்ன சொன்னார் என்பது கூடியிருந்தவர்களுக்கு விளங்க வில்லை. அப்படியானால், இந்த சர்ச்சைக்குக் காரணம் என்ன? அவர் என்ன சொன்னார் என்பதில் சர்ச்சை ஏற்படும் அளவுக்கு அவர் வார்த்தைகளில் ஏன் தெளிவில்லாமல் போயிற்று? இவைகள் நம்முன் எழும் கேள்விகள். இதற்கான பதில் அடுத்த சிலுவை வாக்கியத்தில் உள்ளது. ஆம், "**தாகமாயிருக் கிறேன்**" (யோவான் 19:28) என்று சொன்னாரல்லவா அதில் அப்படியே அடங்கியிருக்கிறது.

இங்கே தாகம் என்பது, வேலை அலுப்பின் நிமித்தமாகவும், பிரயாணக் களைப்பின் நிமித்தமாகவும் நமக்கெல்லாம் உண்டாகிறதே அந்தத் தாகம் அல்ல. அங்கே இயேசுவானவருக்கு ஏற்பட்ட தாகம் **வழக்கத்திற்கு மாறானது, முற்றிலும் வேறுபட்டது**. சிலுவையில் அவருக்கு ஏற்பட்ட தாகம், அவரு டைய நாவை உலரப் பண்ணி வறண்டு போகச் செய்த தாகம். நாவை வீங்கச் செய்த தாகம். நாவு அங்கும் இங்கும் பிறழ முடியாமல் வாயோடே ஒட்டிக் கொண்ட தாகம். வார்த்தைகளை வெளிக்கொணர முடியாமல் செய்த தாகம். பேசுவது இன்னதென்று புரியாமல் போகும்படி செய்த தாகம். இப்படிப்பட்ட தாகம் அவருக்கு அங்கே இருந்தபடியால் தான், நமதாண்டவர் **தாகமாயிருக் கிறேன்** என்று சொன்னார்.

இயேசுவானவர் சிலுவையில் பேசினவைகளை, சிலுவை வார்த்தைகள் என்று சொல்வோரும் உண்டு. சிலுவை வாக்கியங்கள் என்று சொல்வோரும் உண்டு. சிலுவைச் செய்தி என்று சொல்லுவோரும் உண்டு. ஒருவேளை சிலுவையில் பேசின ஒவ்வொன்றும் சிலுவைச் செய்தியானால், "தாகமாயிருக் கிறேன்" என்ற வார்த்தையும் ஒரு சிலுவைச் செய்திதான். சிலுவையில் பேசினவைகளில், மிகவும் சுருக்கமானது இது தான். அத்தோடு தன்னுடைய சரீரத் தேவையினிமித்தமாக அவர் பேசின ஒரே வார்த்தையும் இதுதான்.

சரி, "தாகமாயிருக்கிறேன்" என்ற சிலுவை வார்த்தையிலிருந்து நாம் கற்றுக் கொள்ளக் கூடிய பாடங்கள் என்னவென்று பார்ப்போம்.

**I "தாகமாயிருக்கிறேன்" என்பது இயேசுவானவரின் மனிதத் தன்மையைக் காட்டுகிறது.**

சிலுவையில் மரிக்கும் போது, தாகமாயிருக்கிறேன் என்று அவர் சொன்னதிலிருந்து நம்மால் கற்றுக் கொள்ள முடிகின்ற முதல் பாடம், இயேசுவானவர் இப்பூமியில் இருந்த போது, முழுமையாக மனிதனாகவும் இருந்தார் என்பது.

நமதாண்டவர், இப்பூமியில் மனிதராக இருந்தாரா? அல்லது தெய்வீகம் நிறைந்தவராக இருந்தாரா? என்றதொரு கேள்வியைக் கேட்டால், அவர் இரண்டும் உடையவராக இருந்தார் என்றே பதில் வரும். அது எப்படி என்று மீண்டும் கேட்டால், இவ்விதம் பதிலளிக்க முடியும். எப்படியொரு குழந்தையை, முழுமையாக தகப்பனுடைய குழந்தை என்றும் தாயினுடைய குழந்தை என்றும் சொல்ல முடியுமோ அது போலவே, இயேசுவானவரையும், பரலோக தகப்பனுக்கு முழுமையான மகன் என்றும் அதே சமயத்தில், பூமிக்குரிய தாய்க்கும் முழுமையான மகன் என்றும் கூற முடியும். இப்படி பரலோக தகப்பனுடைய மகன் என்றளவில், தெய்வீகம் நிறைந்தவரென்றும், பூமிக்குரிய தாயினுடைய மகன் என்றளவில், மனிதத் தன்மையுடையவரென்றும் சொல்ல முடியும். **இந்த இரட்டைத் தன்மையை** அவருடைய வாழ்க்கையில் அடிக்கடி நாம் பார்க்க முடியும்.

பூமிக்குரிய தாயின் மகன் என்றளவில் ஒரு சமயம் படகில் செல்லும் போது நம்மைப் போன்றே களைப்புற்று **உறங்கினார்** (மத். 8:24). ஆனால், கடலில் பெருங்காற்று உண்டாகி, சீஷர்கள், ஆண்டவரே எங்களை இரட்சியும் என்று அலறினபோது, பரலோகத் தகப்பனின் மகன் என்றளவில் தெய்வீகம் நிறைந்தவராய், **கடலையும், காற்றையும் அதட்டினார்** (மத். 8:26). அதுபோலவே, ஒரு தாயினுடைய மகனாக, மனித்த தன்மையோடு லாசருவின் கல்லறையருகில் தன் உணர்வுகளை அடக்க முடியாமல் பெலவீன மனிதனைப்போல **கண்ணீர் விட்டார்** (யோவான் 11:35). ஆனால், பரலோகத் தகப்பனுடைய குமாரன் என்றளவில் தெய்வீகம் நிறைந்தவராய் "**கல்லை எடுத்துப்போடுங்கள்**" என்று சொன்னதோடு (11,39) "**லாசருவே வெளியே வா**" என்று உரத்த சத்தமாய்க் கூப்பிடவும் செய்தார். மரித்த லாசருவும் அங்கே உயிரோடே வந்தான் (11:44).

இப்படி தெய்வீகம் நிறைந்தவராக இருந்த போதும் அவருக்குத் தாகம் உண்டாயிற்றென்று பார்க்கிறோம். இயேசுவானவருக்கு சிலுவையில் மாத்திரம் தாகம் உண்டாகவில்லை. இப்பூமியின் வாழ்க்கையில் அவர் இருந்த போது, நம்மைப் போன்றே சோர்வுற்ற போதெல்லாம் அவருக்கும் தாகம் ஏற்பட்டது. ஒரு சமயம் ஊழியப் பயணத்தால் களைப்புற்ற அவர் யாக்கோபின் கிணறு என்று நம்பப்படுகின்ற கிணற்றண்டையில், யூதர்கள் சம்பந்தம் கலவாத சமாரியப் பெண்ணிடம் "**தாகத்துக்குத் தா**" என்று கேட்டு, ஓர் உரையாடலை ஆரம்பித்து, உண்மை நிலையை அம்பலப்படுத்தி, இறுதியில் ஒரு மாபெரும் ஆவிக்குரிய உண்மையை வெளிப்படுத்தினார். (யோவான். 4:7-24). ஆனால், இங்கோ தன்னுடைய பூமிக்குண்டான பிரயாணத்தின் இறுதியில் நம் ஒவ்வொருவரின் ஆவிக்குரிய தாகத்தைத் தீர்க்கும்படியாக "**தாகமாயிருக்கிறேன்**" என்று கூறுகிறார்.

நம்முடைய இயேசுவானவர், மனிதனாகவும் இருந்தார் என்பதற்கு தாகம் ஒரு சரியான சான்றாக இருக்கிறது. இன்னும் அவர் ஞானஸ்நானம் பெற்ற உடனே, பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு வானந்திரத்திற்கு கொண்டு போகப்பட்ட போது அங்கே அவருக்குப் "**பசியுண்டாயிற்று**" என்று பார்க்கிறோம். (மத். 4:2) இங்கே அவருடைய பசியையும், தாகத்தையும் ஒப்பிட்டுப்பார்த்தால் என்ன விளங்குகிறது? **ஊழிய ஆரம்பம் பசியோடு, ஊழிய முடிவு தாகத்தோடு**. பசியும், தாகமும் இல்லாத இடத்திலிருந்து வந்தவருக்கு (வெளி. 7:16,17) பசியும், தாகமும் இதெப்படி? இந்தப் பசியும் தாகமும் சுத்தமாக மனிதத் தன்மையோடு தொடர்புடையதாகையால் "தாகமாயிருக்கிறேன்" என்று உரைத்தது அவரின் மனுஷீகத்திற்கு சந்தேகத் திற்கு அப்பாற்பட்ட சான்றாக இருக்கிறது.

**II. "தாகமாயிருக்கிறேன்" என்பது அவருடைய வேதாகம அறிவின் ஆழத்தைக் காட்டுகிறது.**

சிலுவையில் மரிக்கும் போது "தாகமாயிருக்கிறேன்" என்று இயேசுவானவர் சொன்னதிலிருந்து நம்மால் கற்றுக்கொள்ள முடிகின்ற இரண்டாவது பாடம் அவருக்கு இருந்த வேதாகம அறிவு பற்றியது.

ஒருவேளை பாடுகளுக்கும், வேதனைகளுக்கும் மத்தியில் அவர் தாகமாயிருக்கிறேன் என்று சொல்லியிருந்தாலும், ஏன் அவர் அப்படிச் சொன்னார் என்பதற்கு வேத வசனம் ஓர் அருமையான காரணத்தைக் கூறுகிறது. ஆம், "**வேத வாக்கியங்கள் நிறைவேறத் தக்கதாக தாகமாயிருக்கிறேன்**" என்று அவர் சொன்னதாக (யோவான். 19:28) வேத வாக்கியங்கள் தேவ சித்தத்தைக் கொண்டிருப்பதால், அவைகளை நிறைவேற்றவே அவர் பூமிக்கு வந்தார். அவர் இப்பூமியில் இருந்த போது, "**நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து, அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது**" **என்றார்** (யோவான். 4:34).

அப்படியானால், "தாகமாயிருக்கிறேன்" என்று சொன்னதின் மூலம் எந்த வேத வாக்கியத்தை நிறைவேற்றினார்? இங்கே, சங்கீதம் 69:21ஐக் கவனியுங்கள். "என் ஆகாரத்தில் கசப்புக் கலந்து கொடுத்தார்கள், **என் தாகத்துக்குக்** காடியைக் குடிக்கக் கொடுத்தார்கள்" என்று உள்ளது. இவ்வசனத்தில் அவருடைய **சிலுவைத் தாகம் பற்றி முன்னறிவிக்கப் பட்டுள்ளது.**

இயேசுவானவர் சிலுவையில் அறையப்பட்ட போது, இரண்டு வித்தியாசமான நேரங்களில், இரண்டு வகையான பானம் அவருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. முதலாவது பானம், சிலுவைப்பாடுகளின் ஆரம்பத்தில், அதாவது காலை சுமார் 9.00 மணியளவில். கசப்புக் கலந்த இந்த பானம் **ஒரு நோக்கத்தோடு** அந்நாட்களில் சிலுவைக் குற்றவாளிகளுக்கு கொடுக்கப் பட்டுள்ளது. அதாவது, **குற்றவாளியின் உணர்வுகளை மழுங் கடிப்பதற்காக.** ஆனால், இயேசுவானவரோ, சிலுவையில் பேச வேண்டிய, நிறைவேற்ற வேண்டிய காரியங்கள் இன்னும் இருந்தபடியால், உணர்வுகளை மழுங் கடிக்கும் அப்பானத்தை ருசி பார்த்து குடிக்க மறுத்து விட்டார் (மத். 27:34) இப்படி மறுத்ததின் மூலம், சங்கீதம் 69:21-ல் சொல்லப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனம் துல்லியமாக நிறைவேறுவதற்கும் வழி செய்து விட்டார். எப்படியெனில் சங்கீதம் 69:21. என் தாகத்துக்குக் காடியைக் கொடுத்தார்கள் என்று சொல்லுகிறது. அடுத்து, இங்கே சொல்லப்படும் இந்த இரண்டாவது பானம். சிலுவைப்பாடுகளின் முடிவில் கொடுக்கப்பட்ட ஒன்று. அதாவது மாலை சுமார் 3 மணி போல் "உடனே அவர்களில் ஒருவன் ஓடி கடற்காளானை எடுத்து காடியில் தோய்த்து, அதை ஒரு கோலில் மாட்டி, அவருக்குக் குடிக்கக் கொடுத்தான்" என்று சொல்லப்பட்டுள்ளது (மத். 27:48)

ஓடிப்போய் இப்பானத்தைக் கொடுத்தவன், வேத வாக்கியம் நிறைவேற வேண்டுமென்று கொடுத்தானா? கண்டிப்பாக இல்லை. அல்லது தாகத்தால் துடிக்கிறாரே, சரி போகட்டும் என்று தான் கொடுத்தானா? அதுவும் இல்லை. பின்னே எதற்காகக் கொடுத்தான்? "எலோயீ, எலோயீ" என்று அவர் சொன்னது, எலியாவைக் கூப்பிடுவது போல் தெரிந்தபடியால், அவர் சொல்லுவது தெளிவாகக் கேட்கும்படி, அவருடைய நாவு கொஞ்சம் ஈர மாகட்டும் என்று கொடுத்தானேயொழிய, நெஞ்சில் கொண்ட ஈரத்தால் கொடுக்க வில்லை. இது உண்மைதான் என்பதை சங்கீதம் 69:20 தெளிவாகச் சொல்லுகிறது. "**நிந்தை என் இருதயத்தைப் பிளந்தது; நான் மிகவும் வேதனைப்படுகிறேன். எனக்காகப் பரிதபிக்கிறவனுண்டோ என்று காத்திருந்தேன். ஒருவனும் இல்லை. தேற்றுகிறவர்களுக்குக் காத்திருந் தேன், ஒருவனையும் காணேன்**" என்றுள்ளது. அதாவது, அவருடைய வேதனையைக் காண்டு பரிதபிக்கிறவனோ, தேற்றுகிறவனோ ஒருவனும் இல்லையென்று. ஆகவே, இரக்கம் என்பது அங்கே மருந்துக்கும் இல்லவே இல்லை.

ஆயினும், சிலுவைப்பாடுகளின் ஆரம்பத்தில் கொடுத்த முதல் பானத்தை ஏற்றுக் கொள்ள மறுத்த இயேசுவானவர், இந்த இரண்டாவது பானத்தை எதிர்ப்பும் மறுப்பும் இல்லாமல் ஏற்றுக்கொண்டார். யோவான்

நற்செய்தியாளர், "**இயேசு காடியை வாங்கின பின்பு, முடிந்தது என்று சொல்லி, தலையைச் சாய்த்து ஆவியை ஒப்புக்கொடுத்தார்" என்று கூறுகிறார்.** அங்கே அவர் ஏற்றுக்கொண்டது, அவரது தாகத்தைத் தீர்க்கும் படியான பானத்தையல்ல. மாறாக "**எல்லாம் முடிந்தது**" என்பதைத் தெளிவாகச் சொல்ல உதவிய பானத்தையே. இதன் மூலம் வேத வாக்கியம் நிறைவேற வேண்டுமென்பதில் அவர் எவ்வளவு அக்கறையுள்ளவராக இருந்தார் என்பது தெளிவாகிறது. அப்படியானால், வேத வாக்கியம் நிறைவேற வேண்டுமென்ற அக்கறை அவருக்கு எப்படி வந்தது? வேத வாக்கியங்களை அவர் துல்லியமாக அறிந்து வைத்திருந்ததாலேயே.

ஆகையால், அருமையானவர்களே தேவ சித்தத்தை நிறைவேற்ற வேண்டுமென்று விரும்புகிற நாம் ஒவ்வொருவரும் வேத வாக்கியங்களைத் துல்லியமாக அறிந்து வைத்திருக்க வேண்டியது அவசியம். அப்பொழுது தான் அவைகளை நிறைவேற்றுவதற்கு நம்முடைய பங்கை நாம் சரியாகச் செய்ய முடியும். வேத வாக்கியங்களை நாம் அறியாமலிருந்தால், தேவன் சம்பந்தப்பட்ட காரியங்களில், நாம் தப்பான எண்ணமுள்ளவர்களாகவே இருப்போம் (மத். 22:29) ஆகவே, தேவ சித்தத்தையும், அவர் நமக்காக வைத்திருக்கிற இரட்சிப்பின் திட்டத்தையும் தெளிவாக அறிந்து கொள்வ தற்கும், அதன்படி செய்வதற்கும் வசனங்களுக்குள்ளாகச் செல்வோம். இயேசு ஆண்டவரைப் போல், உயிர் போகிற நேரத்திலும், வேத வசனங் களுக்காக நம்மை ஒப்புக்கொடுப்போம்.

**III. "தாகமாயிருக்கிறேன்" என்பது அவருடைய பாடுகளின் தீவிரத்தைக் காட்டுகிறது.**

இயேசுவானவர் சிலுவையில் மரிக்கும் போது தாகமாயிருக்கிறேன் என்று சொன்னதிலிருந்து, நம்மால் கற்றுக் கொள்ள முடிகின்ற இன்னுமொரு பாடம், அவருடைய பாடுகளின் தீவிரம் பற்றியது.

இயேசு ஆண்டவரின் சிலுவைப்பாடுகளை அதன் உண்மைத் தன்மையோடு எடுத்துரைத்தால் கல்நெஞ்சு கூட கண்டிப்பாகக் கரையும். ஆம், அது அவ்வளவு வியாகுலம் நிறைந்தது. சங்கீதக்காரன் இயேசுவின் சிலுவைப் பாடுகளின் கொடுமை பற்றி இவ்விதம் சித்தரிக்கிறார். தண்ணீரைப் போல ஊற்றுண்டேன்; என் எலும்புகளெல்லாம் கட்டுவிட்டது. என் இருதயம் மெழுகு போலாகி, என் குடல்களின் நடுவே உருகிற்று. என் பெலன் ஓட்டைப் போல் காய்ந்தது; என் நாவு மேல் வாயோடே ஒட்டிக் கொண்டது; என்னை மரணத்தூளிலே போடுகிறீர். நாய்கள் என்னைச் சூழ்ந்திருக்கிறது; பொல்லாத வர்களின் கூட்டம் என்னை வளைத்துக் கொண்டது. என் கைகளையும், கால் களையும் உருவக் குத்தினார்கள் என்று (சங். 22:14-16). இப்பகுதியில் நாம் கவனிக்கத்தக்கது, "**என் பெலன் ஓட்டைப்போல் காய்ந்தது , என் நாவு மேல் வாயோடே ஒட்டிக் கொண்டது**" **என்பது.** குயவனால், சுடப்பட்ட ஓட்டைவிட வறட்சி கொண்டதாக எதுவுமே இருக்க முடியாது. அப்படித்தானே. ஆனால், **இயேசுவானவரின் சரீரம் அந்த ஓட்டைப் போல காய்ந்ததாம்.**

அவருடைய சரீரம் ஓட்டைப்போய் காய்ந்து, நாவு மேல் வாயோடே ஒட்டிக் கொண்டதென்றால், அச்சரீரத்தை என்னமாய்ப் பாடுபடுத்தியிருப்

பார்கள் என்று எண்ணிப்பாருங்கள். சிலுவை மரணம் என்பது கொடுங் குற்றவாளிகளுக்காகவே கண்டுபிடிக்கப்பட்டு, பிரத்யேகமாக வடிவமைக் கப்பட்ட ஒன்று. ஒரு குற்றவாளி அப்படி சிலுவைக்குக் கொண்டு போகப் படுவதற்கு முன்பாக, கடுமையான முறையில், ஈவு இரக்கமில்லாமல், பலமிக்க இரண்டு ரோமச் சிப்பாய்களால், மாறி, மாறி சவுக்கால் அடிக்கப்படுவான். பல பிரிவுகளைக் கொண்ட அந்தத் தோல் சவுக்கின் நுனியில் இரும்புக் குண்டுகளும், முட்களும், எலும்புத் துண்டுகளும் பொருத்தப்பட்டிருக்கும். சவுக்கடி நிறைவேறியதற்குப் பின் குற்றவாளியின் சரீரத்தை, குறிப்பாக முதுகைப் பார்த்தால், **உழவன் நிலத்தை ஏர்பூட்டி உழுதது போல் இருக்கு மாம்.** அச்சவுக்கடியின் போது ஏராளமான இரத்தம் வெளியேறுவதால், சிலுவை மரணத்துக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட சிலர் சவுக்கடியின் போதே இறந்து போவது உண்டு.

இப்படி சவுக்கடியின் போது ஏராளமான இரத்தமும், தண்ணீரும் வெளியேறிய நிலையில், குற்றவாளி சிலுவையில் அறையப்பட்டு, வெட்ட வெளியில், உச்சி வெயிலில் தொங்கவிடப்படுவான். அப்பொழுது, சரீரம் கிட்டத்தட்ட கருவாடு போல் காய்ந்து போய்விடும். வியர்வை கொஞ்சம் வெளியே வந்தாலே, தண்ணீர் கேட்கும் சரீரம், வியர்வையும், இரத்தமும், கண்ணீரும் ஒட்டு மொத்தமாக வெளியே வந்த பிறகு, வெயிலிலும் காய்ந்து தொங்கி கொண்டிருக்கும் போது, **தாகத்தால் எப்படித் தவித்திருக்கும் என்று உங்களால் ஊகிக்க முடிகிறதா?** சவுக்கடியாலும், ஆணிகள் கடாவப் பட்டதால் உண்டான வேதனையாலும், பாரச் சிலுவையைச் சுமந்ததால் ஏற்பட்ட களைப்பாலும், முட்கிரீடம் சூட்டப்பட்டதால் நேர்ந்த வலியாலும் அனுபவித்த கொடுமைகள் போதாதென்று, இங்கே **புதுவேதனையாக தாகமும்** சேர்ந்து கொண்டது.

எப்பொழுதாவது விபத்து நடந்த இடத்திற்கு உடனடியாகப் போய் பார்க்கும் வாய்ப்பு உங்களுக்கு கிடைத்திருக்குமானால், **தாகத்தின் கொடுமையை** உங்களால் உணர்ந்திருக்க முடியும். விபத்தில் சிக்கி, இத்தம் வழியத்தக்கதாக காயம் ஏற்பட்டு அல்லது சரீரத்தின் ஒரு பகுதி சிதைந்து, உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் ஒருவன், அத்தனை வலி, வேதனை களுக்கும் மத்தியில் தாகத்தின் கொடுமையை எல்லாவற்றுக்கும் மேலாக உணர்ந்தவனாக, எனக்கு உதவி, எனக்கு உதவி என்று சத்தமிடாமல், **ஐயோ, தண்ணீர், ஐயோ தண்ணீர்** என்று சத்தமிடுவான். அங்கே தாகம் என்பது எல்லா வேதனைகளையும் கடந்ததாக இருக்கும். ஆகையால், தாகமாயிருக்கிறேன் என்று இயேசுவானவர் சொன்னதிலிருந்தும், அவர் என்ன சொன்னார் என்பது மற்றவர்களால் புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு அவருடைய நா வறண்டு போனதிலிருந்தும், அவருடைய சரீரம் எவ்வளவு பாடுகள் பட்டிருக்கிறது என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. அவருடைய பாடுகளையும், வேதனைகளையும், வியாகுலங்களையும் உறுதி செய்வ தாகவே அவரடைந்த தாகம் இருக்கிறது. மொத்தத்தில் சிலுவைப் பாடுகளின் தீவிரத்தை இயேசுவின் தாகம் ஒட்டு மொத்தமாக எடுத்துரைக்கிறது.

இப்படியாக, இயேசுவின் சிலுவைத் தாகம் நமக்கு மூன்று பாடங்களைக் கற்றுக் கொள்ள உதவியிருக்கிறது. நாம் நித்திய காலத்தில் தாகமடையாமலிருக்கவே அவர் இப்பூமியில் இவ்விதம் தாகமானார். நாம் இந்த பூமியிலே தாகமுள்ளவர்களாயிருப்போமானால், நித்தியத்தில் பரலோக வாழ்வில் தாகமற்றவர்களாக இருக்க முடியும். அப்படியானால் எதன் மீது நாம் இவ்வாழ்வில் தாகமுள்ளவர்களாயிருக்க வேண்டும்? மலைப்பிரசங்கத்தில் நமதாண்டவர் **நீதியின் மேல் பசி, தாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்** என்று கூறியுள்ளார் (மத். 5:6). அப்படியானால், நீதி என்பது என்ன? தாவீது சொல்லும் போது, **உமது கற்பனைகளெல்லாம் நீதியுள்ளவைகள்** என்று கூறுகிறார் (சங். 119:172). இதன் பொருள், தேவனுடைய கற்பனைகளாகிய வேத வசனங்கள் நீதியுள்ளவைகளாயிருக்கிறது. அவைகளின்பால் நாம் ஒவ்வொருவரும் தாகம் உள்ளவர்களாயிருக்க வேண்டும். அதாவது, இயேசுவானவர் அவைகளை நிறைவேற்றுவதில் எப்படி அக்கறையுள்ளவராக தன்னுடைய உயிர் போகும் நிலையில் கூட இருந்தாரோ, அது போல நாம் வேத வாக்கியங்களை நிறைவேற்றுவதில் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும்.

மேலும், இயேசுவானவர், தாகமாயிருக்கிறவன் என்னிடத்தில் வரக்கடவன் என்று சொல்லியிருக்கிறார். (யோவான் 7:37). இன்னும் என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகம் அடையான் என்றும் சொல்லியிருக்கிறார். (யோவான் 6:35) ஒருவன் நித்திய காலத்தில் தாகமடையாமலிருக்க கிறிஸ்துவிடம் வரவேண்டும். **கிறிஸ்துவினிடம் வருவதென்றால், ஒருவன் கிறிஸ்துவின் உபதேசத்தண்டை வரவண்டும்.**

கிறிஸ்துவின் உபதேசமாக இன்றைக்குப் புதிய ஏற்பாடுதான் இருக்கிறது. (2யோவான் 9) ஆகவே, புதிய ஏற்பாட்டு உபதேசப்படி தான் நமது ஆவிக்குரிய காரியங்கள் அனைத்தும் இருக்க வேண்டும். நம்முடைய பக்தி, நம்முடைய ஞானஸ்நானம், நம்முடைய இரட்சிப்பு, நம்முடைய ஆராதனை முறை, நாம் சார்ந்திருக்கும் சபை, நம்முடைய நம்பிக்கை, கிறிஸ்துவின் இரண்டாம் வருகை பற்றிய நம்முடைய எதிர்பார்ப்பு என இவை அனைத்தும் புதிய ஏற்பாட்டு உபதேசத்தின்படி தான் இருக்க வேண்டும். கிறிஸ்துவின் உபதேசமாகிய புதிய ஏற்பாட்டில் நிலைத்திராத வன் தேவனை உடையவனல்ல.

புதிய ஏற்பாட்டு உபதேசத்தில் நிலைத்திராவிட்டால், நாம் நரகத்தில் போய்ச் சேர்ந்து நித்திய காலத்துக்கும் தாகமுள்ளவர்களாய் மாறிவிடுவோம். பிறகு, லாசரு ஐசுவரியவான் உவமையில் வரும், ஐசுவரியவானின் கதிதான். விரலின் நுனித் தண்ணீருக்காக என்றென்றும் ஏங்கிக் கொண்டிருக்க வேண்டியதுதான். (லூக். 16:24). ஆகையால், கிறிஸ்துவானவர் நமக்காகக் கல்வாரிச் சிலுவையில் அடைந்த தாகத்தின், உன்னத நோக்கத்தை வீணடித்தவர்களாக மாறிவிடாமல் நீதியாகிய வேத வசனங்களின் மீது பசி தாகமுள்ளவர்களாயிருப்போமாக! ஆமென்.

**S. ராஜநாயகம்**

ஜெபியுங்கள் ! பங்கு பெறுங்கள் !!

# பதினொன்றாவது வேனிற்கால வேதாகம முகாம்

மற்றும்

# திருமறை தியானம் நேயர்கள் & திருமறை ஆசான் வாசகர்கள் கருத்தரங்கம்

இடம் : YMCA வளாகம், ஏலகிரிமலை (வேலூர் மாவட்டம்)
(ஈரோடு - சென்னை இரயில் மார்க்கத்தில்.
ஜோலார் பேட்டை ஜங்ஷனிலிருந்து சுமார் 25 கி.மீ.)
(திருப்பத்தூர் பஸ் நிலையத்திலிருந்து சுமார் 30 கி.மீ.)

**நாள் : மே மாதம் 5,6,7 - 2008 (திங், செவ், புதன்)**

## சிறப்பம்சங்கள்

- கோடையின் கொடுமையிலிருந்தும், வழக்கமான வாழ்க்கை முறையிலிருந்தும் விடுபட்டு, தேவ சமூகத்தில் காத்திருக்க ஓர் அருமையான வாய்ப்பு.
- தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகைதரும் பரிசுத்தவான்களோடு சங்கமிக்கும் சந்தர்ப்பம்.
- ஆன்மீக வளர்ச்சிக்கு வழிகோலும் தேவச் செய்திகள்.
- பக்திப் பரவசமூட்டும் பாடல்கள்.
- கோடை வாசஸ்தலம் - சமச்சீரான தட்ப வெப்பம்.
- வாலிபர்கள், பெண்கள், சிறுபிள்ளைகளுக்கென தனித்தனி வகுப்புகள்.
- குடும்பமாகவும், குழுவாகவும் தங்குவதற்கு தனித்தனி அறைகள். [கட்டணம் உண்டு]
- பெண்களுக்கு தனி இடவசதி.
- சிறுபிள்ளைகளை உற்சாகப்படுத்த பரிசுகளுடன் கூடிய போட்டிகள்.

**உணவும், தங்குமிடமும் இலவசம்**

**பதிவுக் கட்டணம்**

**பெரியவர்கள் ரூ. 100 /- சிறியவர்கள் ரூ. 60 /-**

## கிறிஸ்துவின் சபை

195, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
PH. : 04257 - 230603 Cell : 98427 - 30382, 99655 - 30385

**குறிப்பு : சுமார் 400 பேர் மாத்திரமே தங்க இட வசதி உண்டு. ஆகவே பணம் M.O. செய்து முன் பதிவு செய்து கொள்ளுங்கள்.**

# எக்லீசியா வேதாகமக் கல்லூரி

## மாணவர் சேர்க்கை அறிவிப்பு

# EKKLESIA BIBLE COLLEGE

P.O. Box-27, KANGAYAM - 638 701. India.

## STUDENTS ADMISSION NOTIFICATION

**பு**திய ஏற்பாட்டு உபதேசத்தில் முழு நம்பிக்கையும், கிறிஸ்துவின் நற்செய்தியை நானிலம் எங்கும் எடுத்துச் சொல்லவேண்டுமென்பதில் இணையில்லா ஈடுபாடும் கொண்ட **வாலிபர்களிடமிருந்து** விண்ணப்பங்கள் உடனடியாக வரவேற்கப்படுகின்றன.

**காலம்** : **3 வருடம்** (செமஸ்டர் முறை)

**Duration** : **3 Years** (Semester System)

**கல்வித்தகுதி** : **+2 தேர்ச்சி** (அல்லது) **பட்டப்படிப்பு**

**Qualification** : **+2 Pass (or) Any Degree**

**பட்டம்** : **வேதயியலில் இளங்கலை பட்டம்**

**Degree** : **B.B.S.** (Bachelor of Biblical Studies)

விபரங்கட்கும், விண்ணப்பங்களுக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

## இயக்குநர்

எக்லீசியா வேதாகமக் கல்லூரி
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701. இந்தியா
✆ 04257 - 230030, 230603 செல் : 98427 - 30382

# ஆவியின் ஒருமை

எபேசு பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு அப்போஸ்தலர் பவுல் இவ்வாறு எழுதுகிறார். "ஆதலால், கர்த்தர் நிமித்தம் கட்டுண்டவனாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிற புத்தியென்னவெனில், நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து, மிகுந்த மனத்தாழ்மையும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரை ஒருவர் தாங்கி, சமாதானக்கட்டினால் **ஆவியின் ஒருமையைக்** காத்துக் கொள்ளுவதற்கு ஜாக்கிரதையாயிருங்கள். உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டது போல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு. ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு; அவர் எல்லார் மேலும், எல்லாரோடும், உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர்". - எபேசியர் 4:1-6.

**ஆவியின் ஒருமை** பற்றி பவுல் இங்கு பேசுகிறார். ஒரே ஆவி உண்டு, அவர் தேவத்துவத்தில் ஒரு நபராக, (ரோமர் 1:20) பிதாவாகிய தேவனோடும், குமாரனாகிய தேவனோடும் இணைந்திருக்கிறார்.

தேவத்துவத்தின் ஒவ்வொருவரும் ஆற்ற வேண்டிய ஒரு பங்கு, அல்லது ஒரு குறிப்பிட்ட பணி இருந்தது. பழைய ஏற்பாடும், புதிய ஏற்பாடும் அடங்கிய சுவிசேஷத்தை எழுத பலரை பரிசுத்த ஆவியானவர் வழி நடத்தி உதவியிருக் கிறார். எனவே, சுவிசேஷத்தில் வாயினால் ஏவப்பட்டு எழுதப்பட்ட தேவனுடைய வசனங்கள் இருக்கின்றன (2பேதுரு 1:20;21; 2 தீமோ 3:16,17).

சுவிசேஷம் ஆவியின் வார்த்தை என்றும், அல்லது சத்தியத்தின் ஆவி என்றும் மீண்டும் மீண்டுமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. (யோவான் 14:17; 15:26; 16:13). வேத வசனமாகிய ஆவியின் பட்டயம் என பவுல் அதைக் குறிப்பிட்டார். (எபே. 6:17). எபிரேய எழுத்தர் சொன்னார்; "ஆகையால், அந்தத் திருஷ்டாந்தத்தின்படி, ஒருவனாகிலும் கீழ்ப்படியாமையினாலே விழுந்து போகாதபடிக்கு, நாம் இந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதையாயிருக்கக் கடவோம். தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும், ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக்குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும், யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது" (எபி. 4:11,12).

தேவனுடைய வார்த்தையாகிய ஆவியின் வார்த்தையானது முற்றிலும் சீராக இருக்கிறது. அது பூரணமாகவும் இறுதியானதாகவும் இருக்கிறது. அதன் மூலமாக, தேவன் சொல்ல விரும்பியதைச் சொல்லியிருக் கிறார்; தாம் சொல்ல விரும்பிய சகலவற்றையும் சொல்லியிருக்கிறார். முரண்பாடுகள் எதுவும் அதில் இல்லை. வசனமானது ஒருவனை ஒன்றைச் செய்யச் சொல்லுவதும் மற்றொருவனை வேறொன்றைச் செய்யச் சொல்லுவதும்

கிடையாது. அதனோடு எதையும் சேர்க்கவோ, அல்லது அதிலிருந்து எதையும் எடுத்துப்போடவோ அல்லது எவ்வழியிலும் மாற்றவோ கூடாது. (வெளி. 22:18,19; 2 யோவான் 9-11). சந்தேகமின்றி, பரிசுத்த ஆவியானவரின் வழி நடத்துதலினால், ஒரே பரிசுத்த நற்செய்தியைத் தான் போதித்து வருவதாகவும், யாராவது வேறொரு நற்செய்தியைப் போதிக்க வந்தால், அவன் கர்த்தருடைய தூதனாகவே கூட இருந்த போதிலும், தேவனுடைய சாபம் அவன் மேல் இருக்கும் என பவுல் கூறினார் (கலா. 1:6-9).

எனவே, ஆவியானவர் வார்த்தையில் ஜீவனை ஊதினார். எனவே, ஒருவன் அதை விசுவாசித்து, அதற்குக் கீழ்ப்படிந்து தனது வாழ்விலும் இதயத்திலும் அதை ஏற்றுக்கொண்டால் அதுவே அவனுடைய இரட்சிப்புக்கு ஏதுவாகும். பேதுரு "ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர் களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோட ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்பு கூறுங்கள். அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளது மான தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக் கிறீர்களே" (1பேதுரு 1:22,23) என்கிறார். விதைக்கிறவனுடைய உவமையை இயேசு கூறினார்; அதிலே, தேவனுடைய வார்த்தையாகிய விதையானது வித்தியாசமான பலதரப்பட்ட மண்ணில் விழுந்தது பற்றிக் கூறுகிறார். சில விதைகள் நல்ல நிலத்தில் விழுந்தது, நல்ல இருதயங்களில் ஏற்றுக்கொள்ளப் பட்டன. அதின் விளைவாக நல்ல விளைச்சலும், நல்ல பலனும் கிடைத்தது (மத். 13). விதையில் ஜீவனிருந்தது. அந்த ஜீவனை ஆவியானவர் தேவனுடைய வசனமாகிய விதைக்குள் வைத்தார்.

அப்போஸ்தலர் பவுல் சொன்னார்; "நாம் யூதராயினும், கிரேக்கரா யினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம்" (1கொரி. 12:13). பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பற்றி பவுல் இங்கு பேசவில்லை. ஆனால், மாறாக நமது உபதேசத்தின் மூலமாக, அல்லது தேவனுடைய வசனத்தின் மூலமாக கர்த்தருக்குக் கீழ்ப்படிய ஒருவனை ஆவியானவர் வழி நடத்தும் உண்மையைக் குறிப்பிடுகிறார். அதின் ஒரு பகுதி, ஒரே சரீரத்திற்குள் அல்லது கர்த்தரின் ஒரே சபைக்குள் திருமுழுக்குப் பெறுவது. இப்போது, தமது வார்த்தையை உபதேசிப்பதின் மூலம் ஒருவனை சபையில் சேர்க்க, தண்ணீரில் முழுக்கி திருமுழுக்குப் பெறவும், மற்றொருவனை தெளித்து திருமுழுக்குப் பெறவும் ஆவியானவர் வழிநடத்தமாட்டார். ஆவியானவர் அதாவது ஆவியின் வார்த்தை, அனுமதிக்காத பல காரியங்கள் ஆவியானவர் மேல் சுமத்தப்படுகின்றன.

ஆனால், கர்த்தரின் சபையாகிய ஒரே சரீரத்திற்குள் நாம் ஒரு தடவை வந்து விட்டால், "பின்னர் ஒரே ஆவிக்குள்ளாக தாகந் தீர்க்கப்பட்டோம்" என அவர் சொல்லுகிறார். அதாவது, நாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்த பின்னர் தொடர்ந்து ஆவியால் தாகந்தீர்க்கப்படுகிறோம், அல்லது தேவனுடைய

வசனமாகிய ஆவியின் வசனத்தைப் பின்பற்றுகிறோம். நாம் இனி ஒரு போதும் தாகமாக இராதபடியும், பசியாக இராதபடியும், ஜீவத் தண்ணீரிலும் ஜீவ அப்பத்திலும் நாம் பங்கு பெற வேண்டுமென கிறிஸ்து கூறினார்.

இப்போது, ஆவியானவர் தமது வார்த்தையை மனிதனுக்குக் கொடுக்கும் பணியை பூரணமாக முடிக்கும் வரையிலும், அப்போஸ்தலர்களும், அவர்கள் கைகளை வைத்து தேர்ந்தெடுத்த சீடர்களும் தேவனிடமிருந்து வந்தவர்கள் என்றும், தேவனுடைய செய்தியை அளிக்க அவரால் அனுப்பப்பட்டிருந்தனர் என்றும், மக்கள் அவர்களை ஏற்றுக் கொள்ளும்படியாக, அற்புதங்களைச் செய்ய அனுமதித்தார். ஆனால் ஒரு முறை தேவனுடைய விருப்பத்தை எழுத்து வடிவில் கொண்டு வர ஆவியானவர் பலரை ஏவி, புதிய ஏற்பாடு பூரணமாக்கப்பட்ட நிலையில் மனிதனுக்கு அளிக்கப்பட்ட பின்னர், அற்புத அடையாளங்கள் இனி தேவையில்லை என்ற காரணத்தால் அவை ஒய்ந்து போயின். பவுல் 1 கொரிந்தியர் 13 ம் அதிகாரத்தில் இதை மிகத் தெளிவாகக் காட்டுகிறார்.

**ஆவியின் ஒருமையையும்,** ஆவியானவர் வெளிப்படுத்தின சத்தியங்கள் எப்படி ஒருமையை உண்டாக்கின என்பதையும் கவனமாகப் பாருங்கள். தேவன் பிரிந்திருக்கவில்லை; கிறிஸ்து பிரிந்திருக்கவில்லை, ஆவியானவரும் பிரிந்திருக்கவில்லை. தேவனும், கிறிஸ்துவும், பரிசுத்த ஆவியும் பிரிந்திருக்கவில்லை. மாறாக, அவர்கள் ஒன்றாயிருக்கிறார்கள், அவர்கள் ஒற்றுமையாக இருக்கிறார்கள். சேர்ந்து செயல்படுகின்றனர். அது போலவே அவர்கள் பேசிய வசனங்களை நம்மை ஒற்றுமைப்படுத்தவும் ஒன்றாக்கவும் செய்யும்.

ஒரே ஒரு நற்செய்தியும், இரட்சிக்கப்பட ஒரே வழியும் மட்டுமே இருப்பதாக வார்த்தையில் ஆவியானவர் வெளிப்படுத்துகிறார். கிறிஸ்து கூறியிருக்கிறார்; .... "நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்". (மாற்கு 16:15, 16). சகலரும் அந்த நற்செய்தியைக் கேட்டு, விசுவாசித்து, கீழ்ப்படிந்தால் எல்லாருமே ஒரே வழியில் இரட்சிக்கப்படுவர். வீழ்ந்து போனவர்களை இரட்சிக்கும் கர்த்தரின் ஒரே வழி இதுவே. வேறு எந்த வழியிலாகிலும் ஒருவன் இரட்சிப்பு அடைய முடியாது.

ஒரே ஒரு திருமுழுக்கு மட்டுமே உண்டு என வார்த்தையில் ஆவியானவர் நமக்குச் சொல்லுகிறார் (எபே. 4:5) உலகமோ பல திருமுழுக்குகள் இருப்பதாகச் சொல்லுகிறது. ஆனால், பாவ மன்னிப்புக்கென்று (அப். 2:38) அடக்கம் எனப்படும் ஒரே ஒரு திருமுழுக்கைப் பற்றி மட்டுமே ஆவியானவர் கூறுகிறார். (ரோமர் 6:3,4; கொலோ. 2:12). என் நண்பர்களே! மனிதன் கூறுவது எதுவாக இருப்பினும், ஆவியானவர் ஒரே ஒரு திருமுழுக்கு மட்டுமே உண்டு என கூறுகிறார்.

ஒரே ஒரு சரீரம் அல்லது சபை மட்டுமே இருப்பதாக ஆவியானவர் வார்த்தையில் நமக்குச் சொல்லுகிறார். (எபே. 4:4). மீண்டும், பல சபைகள் இருப்பதாக தொடர்ந்து நாம் மனிதனிடமிருந்து கேட்டுக் கொண்டிருக்கிறோம். தாங்கள் பரிசுத்த ஆவியானவருடைய வழி நடத்துதலில் இருப்ப

தாக உரிமை கொண்டாடுபவர்கள் கூட, தேவனுடைய வசனத்தில் குறிப்பிடப் படாத சபைகளில் காணப்படுகின்றனர். ஒரே ஒரு சபை மட்டுமே இருப்பதாக தமது வசனத்தில் வெளிப்படுத்தின ஆவியானவர் - சந்தேக மின்றி, (அது கிறிஸ்துவின் சபை (மத்தேயு 16:18)) அவருடைய வசனத்தில் காணப்படாத சபைகளில் பலரையும் அங்கத்தினராக இருக்க வழி நடத்துவாரா? நிச்சயமாக மாட்டார். ஆவியானவர் பிரிந்திருக்கவில்லை. அவருடைய வசனத்தில் கூறியிருப்பதற்கு முரணான காரியத்திற்குள் ஒருவனை வழி நடத்தமாட்டார். அப்படியானால் மனிதர்களுடைய சபைகளில் இருப்பவர்கள் ஆவியான வரால் அந்த சபைக்குள் வழிநடத்தப்படவில்லை என்று பொருள். அப்படிப் பட்ட மனித சபைகளில் அங்கம் வகிக்க தமது வசனத்தின் மூலமாக பரிசுத்த ஆவியானவர் வழி நடத்தவில்லை. எனது நண்பர்களே! இந்தக் காரியங் களைப் பற்றி நாம் மிகவும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

மேலும் மேலுமாக, வசனத்தின் வழியாக ஆவியானவர் எப்படிப் பேசுகிறார் என்றும், பணியாற்றுகிறார் என்றும், ஆவியினுடைய ஒருமையைப் பற்றியும் நாம் சொல்லிக்கொண்டே போகலாம். இந்த வசனங்களை நாம் பின்பற்றும்போதும், அவைகளை விசுவாசித்து அவற்றிற்குக் கீழ்ப்படியும் போதும் மட்டுமே ஆவியானவர் நம்மில் வாழ முடியும். அற்புதத்தினால் அல்ல, ஆவியானவருடைய வசனத்திற்கு முரண்பாடாக அல்ல, ஆனால், தேவனுடைய வசனமாகிய ஆவியின் உபதேசத்திற்கு ஏற்றபடி நடந்தால் மட்டுமே ஆவியானவர் நம்மில் வாழ முடியும். மேலுமாக, அவ்வாறு செய்தால் மட்டுமே கிறிஸ்துவோடு நாம் ஒன்றித்திருக்க முடியும். இந்த வாழ்வின் முற்றிலுமாக அவருக்கு விசுவாசமாக நடக்கும் போது, கர்த்தரோடு சதா காலமும் இருக்கத்தக்கதாக நாம் இறுதியில் பரலோக ராஜ்யத்திற்குச் செல்ல முடியும். பவுல் எழுதியபடி, "மோசம் போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார்; மனிதன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். தன் மாம்சத்திற் கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான்" (கலா. 6:7,8).

என் நண்பரே! நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? சபையின் அங்கத்தினரா? இல்லையென்றால், கர்த்தரின் வசனத்தை நீங்கள் கேட்டு, கீழ்ப்படிந்து இரட்சிக்கப்பட நாங்கள் ஜெபிக்கிறோம்.

**J.C. சோட்**

**ஆதியாகமம் 3ம் அதிகாரத்தில் மனிதன் இழந்து போனவை (ஆதி 3:19)**

- ❄ கனமும் மகிமையும்
- ❄ தேவ சாயல்
- ❄ தேவனுடனான உறவு
- ❄ தேவன் கொடுத்த அதிகாரம்
- ❄ ஜீவ விருட்சம் ❄ தேவனுடைய நேரடி பராமரிப்பு

பெண்கள் பகுதி

# தேவன் எனக்கு ஏன் இதைச் செய்தார்?

**சென்று போன மாதங்களிலும், தேவன் என்னைக் காப்பாற்றி வந்த நாட்களிலும் எனக்கு உண்டாயிருந்த சீர் இப்பொழுது இருந்தால் நலமாயிருக்கும்.** அப்பொழுது அவர் தீபம் என் தலையின் மேல் பிரகாசித்து; அவர் அருளின வெளிசத்தினால் இருளைக் கடந்து போனேன். தேவனுடைய இரகசியச் செயல் என் கூடாரத்தின் மேல் இருந்தது. அப்பொழுது சர்வ வல்லவர் என்னோடிருந்தார்; என் பிள்ளைகள் என்னைச் சூழ்ந்திருந்தார்கள். என் பாதங்களை நான் நெய்யினால் கழுவினேன்; கன்மலைகளிலிருந்து எனக்காக எண்ணெய் நதிபோல் ஓடிவந்தது; (யோபு 29:2-6).

"**.... இப்போது என் ஆத்துமா என்னில் முறிந்து போயிற்று;** உபத்திரவத்தின் நாட்கள் என்னைப் பிடித்துக் கொண்டது. இராக்காலத்திலே **என் எலும்புகள் துளைக்கப்பட்டு, என் நரம்புகளுக்கு இளைப்பாறுதல் இல்லாதிருக்கிறது**".

உம்மை நோக்கி கூப்பிடுகிறேன்; நீர் எனக்கு மறு உத்தரவு கொடாதிருக்கிறீர்; "..... என் மேல் கொடூரமுள்ளவராக மாறினீர்; உம்முடைய கரத்தின் வல்லமையால் என்னை விரோதிக்கிறீர்... நன்மைக்கு காத்திருந்த எனக்கு தீமை வந்தது; வெளிச்சத்தை வரப் பார்த்துக்கொண்டிருந்த எனக்கு இருள் வந்தது. என் குடல்கள் கொதித்து, அமராதிருக்கிறது; உபத்திரவ நாட்கள் என்மேல் வந்தது. வெயில் படாதிருந்ததும், நான் கறுகறுத்து திரிகிறேன். நான் சபையிலிருந்து எழுந்திருக்கும் போது அலறுகிறேன்" (யோபு 30:16,17; 20,21; 26-28).

"மாறுபாடானவனுக்கு ஆபத்தும், அக்கிரமச் செய்கைக்காரருக்கு ஆக்கினையுமல்லவோ கிடைக்கும்? அவர் என் வழிகளைப் பார்த்து, என் நடைகளையெல்லாம் எண்ணுகிறார் அல்லவோ?" (யோபு 31:3,4).

என்னைப் பகைக்கிறவனுடைய கோபம் என்னைப் பீறுகிறது, என் பேரில் பற்கடிக்கிறான்; என் சத்துரு கொடிய கண்ணினால் என்னைப் பார்க்கிறான் "... நான் சுகமாய் வாழ்ந்திருக்கிறேன்; அவர் என்னை நறுக்கி, என் பிடரியைப் பிடித்து, என்னை நொறுக்கி, என்னைத் தமக்கு இலக்காக நிறுத்தி னார். அவருடைய வில்லாளர் என்னைச் சூழ்ந்து கொண்டார்கள்; என் ஈரலைத் தப்ப விடாமல் பிளந்தார்; என் பிச்சைத் தரையிலே ஊற்றிவிட்டார். நொறுக்குதலின் மேல் நொறுக்குதலை என் மேல் வரப்பண்ணினார்" (யோபு 16:9. 12-14).

"**என் கண் தேவனை நோக்கி கண்ணீர் சொரிகிறது.** ஒரு மனு புத்திரன் தன் சிநேகிதனுக்காக வழக்காடுகிறது போல, தேவனோடே, மனுஷனுக்காக வழக்காடுகிறவர் ஒருவர் உண்டானால் நலமாயிருக்கும்! குறுகின வருஷங் களுக்கு முடிவு வருகிறது; நான் திரும்பி வராத வழியே போவேன். என்

சுவாசம் ஒழிகிறது, என் நாட்கள் முடிகிறது; பிரேதக் குழி எனக்கு ஆயத்த மாயிருக்கிறது. (16:20-22; 17:1).

துன்பத்தில் சிக்கித் தவிக்கும் சமயத்தில் அநேகர் இந்த யோபுவைப் போலவே அங்கலாய்க்கின்றனர். "**தேவன் எங்கே இருக்கிறார்?**" அவர் எனக்கு ஏன் இப்படி செய்து விட்டார் "**நான் என்ன கெடுதி செய்தேன்?**" "**எனக்கு ஏன் இப்படி நேரிட்டது**" தேவன் ஏன் என் அழுகுரலைக் கேட்டு என் வேதனையை மாற்றிப்போடவில்லை? "**என்னால் தாங்கக் கூடாத துயரம் என்னை வாட்டுகிறதே, எனக்கு இனி நிம்மதியே இல்லையா**" என்று பலவிதாமான கேள்விகள் அவர்கள் உள்ளத்தில் எழும்புகிறது.

தேவன் ஏன் மௌனமாய் பார்த்துக் கொண்டிருக்கிறார் என்று நாமும் பலமுறை யோபுவைப் போல குறை கூறுகிறோம். ஆனால் அது சரியல்ல. ஏனென்றால் எந்தவிதமான துன்பத்திலும், நெருக்கத்திலும் சிக்கித்தவிக்கும் எவருக்கும், தேவன் நிம்மதியையும், ஆறுதலையும் அளிக்கிறார். துயரம், இழப்பு நேரிடும் சமயங்களில் நாம் நடந்து கொள்ள வேண்டிய விதத்தையும், அவைகளை மேற்கொள்ளும் வழிகளைக் குறித்தும் அவர் நமக்கு ஆலோசனை அளிக்கிறார். வேத வசனங்கள் மூலமாக அவர் நம்மோடு பேசுகிறார்; அவருடைய அளவற்ற அன்பை வெளிப்படுத்துகிறார். வாழ்வின் சுபிட்சமான நேரங்களிலும், துயரமான நேரங்களிலும் அவரை அண்டிக் கொண்டிருப்பதையே அவர் விரும்புகிறார்.

உங்களுக்கு நினைவிருக்கிறதா? இந்த உலகத்தையும் அதிலுள்ள யாவையும் ஆறு நாட்களில் உண்டாக்கி முடித்த போது "தேவன் தாம் உண்டாக்கின **எல்லாவற்றையும்** பார்த்தார், அது மிகவும் **நன்றாயிருந்தது**" (ஆதி. 1:31) என வேதம் சொல்லுகிறதே. நாசமேயில்லாத, தீங்கில்லாத, துயரங்களில்லாத, மரணமில்லாத ஒரு சுபிட்சமான உலகையே தேவன் ஏற்படுத்தியிருந்தார்.

ஆனால், இவையெல்லாவற்றையும் சீர்குலைக்கும் சதிகாரன் ஒருவன் உண்டென்பதை நினைவில் கொள்ளுங்கள். **அவன் தேவனுக்கு மட்டுமல்ல அவர் படைத்த அன்பின் சிருஷ்டிகள் எல்லாவற்றிற்கும் விரோதி.** அவன் தான் சாத்தான். உலகத்திற்குள் பாவத்தைக் கொண்டு வந்தவன் அவன் தான். பாவத்தின் விளைவாகவே தேவனுடைய அழகான படைப்பெல்லாம் சீர் குலைக்கப்பட்டு, செயலிழந்து, பேரழிவை நோக்கிச் சென்று விட்டது. "...சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத்திலிருந்து விடுதலை யாக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத் தைப் பெற்றுக்கொள்ளும் என்கிற நம்பிக்கையோடே, .... மாயைக்கு கீழ்ப்பட்டிருக் கிறது. ஆகையால் நமக்கு தெரிந்திருக்கிறபடி, இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய் தவித்து பிரசவ வேதனைப்படுகிறது" (ரோமர் 8:20-22).

தனக்கு நேர்ந்த துன்பங்களுக்கெல்லாம் காரணமாயிருந்த கொடுமைக் காரன் யாரென்பதை யோபு புரிந்து கொள்ளாமல், தேவன் இப்படியெல்லாம் செய்து விட்டாரென்று எண்ணி விட்டான். ஆனால் ஆரம்பத்திலிருந்தே சாத்தான் தான் யோபுவைக் குறி வைத்து தாக்கிக் கொண்டிருந்தான் என

வேதம் சொல்லுகிறது. அவனை அழிப்பதற்காக சூறாவளிக் காற்று, பெரும் தீவிபத்து போன்ற பலவிதமான இயற்கைச் சீற்றங்களை உண்டாக்கி சதி செய்தான்! (யோபு 1:16,19).

இன்றைய உலகில் இயற்கைப் பேரழிவுகள் வாடிக்கையாகி விட்டன. இவைகளுக்கெல்லாம் முழுப்பொறுப்பாளன், பிசாசானவன் தான். ஒரு வேளை சில சம்பவங்கள் அவனது நேரடிச் செயலாகவும், இன்னும் பல சிலரது தவறுகளின் காரணமாக இயற்கை விதிகள் மீறப்பட்டு நடந்து கொண்டிருந்தாலும், சகல நாச மோசங்களுக்கும் அவன் தான் காரணம். அவன் தேவனுக்கும் அவர் நேசிக்கும் மனிதனுக்கும் மகா விரோதி. நம்மை அழித்து நிர்மூலமாக்குவதே அவனது குறிக்கோள்.

அப்படியானால், தேவன் சர்வ சக்தி படைத்தவராக இருந்தும் இப்படிப் பட்ட பயங்கரமான சேதங்களை சாத்தான் ஏற்படுத்த அவர் ஏன் அனுமதிக் கிறார்? என்ற கேள்வி உங்கள் மனதில் எழலாம். ஏனென்றால், மனிதன் தனது சுய விருப்பத்தின்படி வீழ்ந்து பாவ வாழ்க்கையிலேயே நிலைத்திருக்க தீர்மானித்தபடியால் இந்த உலகத்தை ஆளும் அதிபதியாக சாத்தானை அவனே நியமித்துவிட்டான். இயேசுவோ இந்த மனிதனுக்கு நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் கிடைக்க ஓர் புதிய வழியை ஏற்படுத்தினார். (2பேதுரு 3:13). **அந்த புதிய உலகத்தில் தான்** ஆதி 1:31ல் உள்ளபடி மீண்டுமாக, எல்லாம் மிகவும் நன்றாய் இருக்கும். இயேசுவை பின்பற்றும் எல்லோரும் இந்த **நாசமோசம் இல்லாத புதிய பூமியில் வாழலாம்.**

**"அப்படியானால், இந்த உலகத்தின் மேல் தேவனுக்கு எந்தவித அதிகாரமுமில்லையா? அல்லது நமக்கு நேரிடுகிற அல்லது வரப்போகிற எந்த ஆபத்தையும் பற்றி தேவன் கவலைப்படுவில்லையா?"** இல்லவே இல்லை! ஆனால் நாம் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும்; இயற்கைச் சீரழிவுகளைத் தடுப்பதற்காக, தேவன் இவ்வுலகத்தின் இயற்கை விதிகளை மாற்றியமைக்கப் போவதில்லை. நல்ல கால சூழ்நிலையிலும் சூறாவளிக் காற்று வீசத்தான் செய்யும். அமைதியான சூழ்நிலையிலும் கடும்புயல் மோதத்தான் செய்யும். சற்றும் எதிர்பாராத நேரத்தில் கடும்புயல் மோதத்தான் செய்யும்.

மற்றும் பல துயர சம்பவங்களுக்கு பாவமே நேரடி காரணம். பள்ளி சிறுவர்கள் சக மாணவர்களை கொலை செய்தல், பழங்குடி இனத்தவர் மற்றொரு இனத்தவரை படுகொலை செய்தல், மதுபானம் மற்றும் போதைக்கு அடிமையானோர் நிகழ்த்தும் பலாத்காரம், படுகொலை போன்ற இவைகளுக்கு வேறு யாரை நாம் நொந்து கொள்வது? இவையெல்லாம், பாவத்தின் காரணமாக தடம்புரண்ட இந்த தலைகீழ் உலகில் (சமுதாயத்தில்) நடக்கத்தான் செய்யும்.

மனிதன் தானாகவே கெடுத்து சீரழித்துப் போட்ட இந்த உலகத்தை தேவன் மீண்டும் சீர்படுத்திக் கொடுப்பதால் எவ்வித நிலையான பயனும் இந்த பாவசாபம் மிக்க உலகிலிருந்து தமது பிள்ளைகளை பிரித்தெடுத்து, அவர் களுக்கென்று ஓர் உன்னதமான வீட்டை (வாசஸ்தலத்தை) ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறார்.

அந்த புதிய வாசஸ்தலத்தினை சென்றடையும் வரை இவ்வுலகத்தில் தம்முடைய பிள்ளைகளுக்கு சகலமும் நன்மையாகவே நடக்கும் என்று அவர் வாக்களித்துள்ளார். (ரோமர் 8:28). அப்படியானால், நம்மைச் சுற்றிலும் ஓர் பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டு, சேதம் நம்மை அணுகாது என்று பொருளல்ல. நாமும் இந்த சேதம் நிறைந்த உலகின் ஒரு அங்கம் தானே. நமக்கும் துயர சம்பவங்கள், அன்பிற்குரியவர்களின் இழப்பு, வாழ்க்கைப் போராட்டங்கள், ஆபத்து மற்றும் மனவேதனைகள் வர வாய்ப்புண்டு.

ஆனால், நம் **தேவன் நம்மைத் தாங்கி நடத்துவார்.** அதுவுமின்றி அவரது **ஆவியானவரும்** நமது உள்ளான மனுஷனில் நம்மை வல்லமையால் **பலப்படுத்துவார்.** - எபேசி 3:16 நமக்கு வரும் இக்கட்டு நேரங்களில் நாம் தேவனுக்கு உண்மையானவர்களாயிருந்தால், சாத்தான் நம்மேல் எய்யும் ஆபத்தான ஆயுதங்களை நமது நன்மைக் கேற்ற கருவிகளாக அவர் மாற்றி விடுவார். "நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவது மில்லை என்பது அவருடைய வாக்குத்தத்தமல்லவா?" (எபி. 13:5).

தேவன் நமது பரம தகப்பன் என்று அறிவோம். உங்கள் பிள்ளைகளுக்கு ஒரு ஆபத்தான சூழ்நிலையென்றால் நீங்கள் எங்கேயிருப்பீர்கள்? பிள்ளை களின் வேதனையை உங்கள் வேதனையாகப் பாவித்து கண்ணீர் சிந்துவீர் களல்லவா? அவர்களின் வேதனையை போக்க உங்களால் இயன்ற எல்லா வற்றையும் செய்வீர்களல்லவா? அவர்களை விட்டு விலகாமல், கூடவே இருந்து அவர்களுக்கு துணை செய்வீர்களல்லவா? ஒருவேளை இப்பேற் பட்ட ஒரு சந்தர்ப்பத்தில் உங்கள் பிள்ளையின் வேதனையைப்போக்க நீங்கள் அருகில் செல்லும் போது, நீர் தான் என் வேதனைக்கும் பிரச்சனைக்கும் காரணம் என்று கூறி உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்குமிடையே ஓர் பிளவு உண்டாகுமானால் உங்கள் மனம் என்ன பாடுபடும் என்பதை கற்பனை செய்து பாருங்கள்.

நம்முடைய வாழ்வின் எந்த சூழ்நிலையிலும் தேவன் நமது ஆவிக்குரிய தகப்பனாக, கூடவே இருக்கிறார். இரத்த சாட்சியாகிய ஸ்தேவான் கண்ட காட்சி உங்களுக்கு நினைவிருக்கிறதா? தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்திருப்பதாக பல சந்தர்ப்பங்களில் காட்சியளித்த இயேசு, ஸ்தேவான் கல்லெறியப்படுகிற துயர வேளையில் மனம் தாளாது எழுந்து நிற்பதைக் காண முடிகிறதல்லவா? வேதனைகள் நம்மைத் தாக்கும் போது இந்தக்காட்சி நமக்கு மிகுந்த ஆறுதலை அளிக்கும். நம் வேதனைகளை நீக்க இயேசு எழுந்து நின்று, தம் கரத்தை நீட்டி, தம்மால் இயன்றதையெல்லாம் செய்து நமது துயரத்தை நீக்கி விடுவார் என்பது அதிக நிச்சயமல்லவா?

**"அவர் எவ்விதம் நமக்கு உதவி செய்கிறார்"** ஒரு அற்புதத்தின் மூலம் அல்ல. ஏனென்றால், தமது ஜனத்திற்கு புதியதொரு பிரமாணத்தை அளிக்கும் போதும், ஒரு புதிய செய்தியாளனை அனுப்பும்போதும் மாத்திரமே தேவன் அற்புதங்களை உபயோகிக்கிறார். ஆனால் சந்தர்ப்ப சூழ்நிலைகளை வைத்தே தேவன் பல மகத்தான உதவிகளை தம் ஜனங்களுக்கு செய்திருக் கிறார். சாதாரண ஜனங்கள், அரசாங்கங்கள், சூழ்நிலைகள் மற்றும் சம்பவங் களை, தம்முடைய ஜனங்களுக்கு சரீரபிரகாரமாகவும் ஆவிக்குரிய பிரகார மாகவும் உதவி செய்யும் ஒப்பற்ற கருவிகளாக அவர் பயன்படுத்தியிருக் கிறார்.

ஆக, இக்கட்டு நேரங்களில், **தம்முடைய மற்ற பிள்ளைகளாகிய** சபையாரின் மனங்களையும், கரங்களையும், உடமைகளையும் துயர்துடைக்கும் கருவிகளாக பயன்படுத்துகிறார். இவர்கள் அவரது குடும்பமாயிற்றே. தம்முடைய பிள்ளைகளுக்கு மட்டுமல்ல, பாடுபடும் உலகத்தாருக்கும் சபையின் மூலம் ஒத்தாசை வருகிற. மேலும் நொறுங்கிப் போன அநேக உள்ளங்களைத் தேற்ற, அவர், உலகப்பிரகாரமான அரசாங்கம், மருத்துவர்கள், மருந்துப் பொருட்கள், தச்சர்கள், ஆலோசகர்கள் போன்றவர்களையும் தமது கருவியாகப் பயன்படுத்துகிறார். மறுவாழ்வு பெற்ற அநேகரின் முகங்களில் மீண்டும் புன்னகை தவழச் செய்கிறார். தாங்கள் பெற்ற நன்மைகளுக்காக அவர்கள் அவரை நன்றியுடன் துதிக்கின்றனர்; சாத்தானின் தீங்குகள் எல்லாவற்றையும் நீக்கி, அவன் வாழ்வை ஆசீர்வதிக்க அவைகளைத் தேவன் பயன்படுத்தியபோது, முன்பு யோபு விரக்தியில் சொன்ன, என் சுவாசம் ஒழிகிறது, என் நாட்கள் முடிகிறது; பிரதேக் குழி எனக்கு ஆயத்தமாயிருக்கிறது என்ற வார்த்தைகளுக்குப் பதிலாக நிம்மதியும், ஆனந்தமும் அவன் வாழ்வில் இடம் பிடித்தன.

தேவனையோ அல்லது சாத்தானையோ தேர்ந்தெடுக்கும் உரிமையை மனிதனிடம் தேவன் கொடுத்துவிட்டார். எனவே, கஷ்டகாலத்தில் நாம் தேவனுக்கு உண்மையாயிருப்பதும் அவர் பார்வைக்கு சரியானதை செய்வதும் நமது இஷ்டம். அவர் நம்மைக் கட்டாயப்படுத்த இயலாது. ஆனால், நாம் அவருடைய கரத்தை உறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொண்டிருக்கும் வரை, எந்த துயர சம்பவங்கள் நம் வாழ்வில் வந்தாலும், அவைகள் தலைகீழாக மாற்றப்பட்டு, நமக்கு நன்மையாகவே முடியும் என்று அவர் ரோமர் 8:28ல் வாக்களித்துள்ளார்.

**BETTY CHOATE** **பெட்டி [illegible] சோட்**

## பாராட்டுகிறோம்

**எங்களது உயர்நிலை அஞ்சல் வழி வேதாகமக் கல்வியை** (Advanced Bible Correspondence Course) **வெற்றிகரமாக முடித்து, கடந்த 29.2.2008 அன்று நடந்த "பட்டயச்சான்றிதழ்"** (Diploma certificate) **வழங்கும் கூட்டத்திற்கு பல மாவட்டங்களிலிருந்து திரளாய் நேரில் வந்திருந்து "சான்றிதழ்" பெற்றுக்கொண்டவர்களைப் பாராட்டுகிறோம். ஜெபிக்கிறோம்.**

**இக்கூட்டத்தில் சிறப்பு விருந்தினர்களாய் சகோ. ஜெர்ரிபேட்ஸ்** (Bro. Jerry Bates) **மற்றும் சகோதரி. பவுலா பேட்ஸ்** (Sis. Paula Bates) **ஆகியோர் கலந்து சிறப்பித்து சான்றிதழ் வழங்கினர்.**

**—ஆசிரியர்.**

வாலிபர் பகுதி

# என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்

**வா**லிப பருவத்தில் உலகத்தாருடைய பாவங்களை சிலுவையில் சுமந்து, மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாளில் வெற்றி வீரராக உயிர்த்தெழுந்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். தாயின் கருவரையிலிருந்து கல்லறைக்கு நாம் போய் சேருமட்டும் பல பருவங்களை கடந்து செல்கிறோம். அப்படி கடந்து போகும் பருவத்தில் மிக முக்கியமான பருவம் தான் வாலிப பருவம். இந்த வாலிப பருவமே ஒருவனுடைய எதிர்கால வாழ்க்கையை தீர்மானிக்கிறது. இந்த பருவத்தில் அநேகர் தவறான முடிவுகளை எடுத்து பிற்காலங்களில் பல துன்பங்கள் அடைந்து கவலையோடு மரித்து போய் இருக்கிறார்கள்.

நாமும் பிற்காலங்களில் இப்படி துன்பப்பட்டு மரிப்பதை விட இந்த வாலிப பருவத்தில் வேதாகமத்தின் அடிப்படையில் சில முடிவுகளை எடுத்து நாம் வாழ்கின்ற போது எதிர்கால வாழ்க்கை நமக்கு சிறப்பானதாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை. அப்படி வேத வசனத்தின்படி இந்த வாலிப பருவத்தில் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் போது நாம் முதிர் வயதிலும் நிச்சயமாக கிறிஸ்துவுக்கு கனி கொடுக்க முடியும்.

நம்முடைய வாலிப பிராயத்திலே நம்மை சீரழிக்கும் பங்கு அதிகமாக நம்முடைய சரீர இச்சையினாலேயேதான் வருகிறது. பிற்பாடு நம்முடைய ஆவியையும் அடக்காதே போகும் போது நாம் முழு பாவத்தையும் ஈடுபாடுடன் செய்து நம்முடைய எதிர்கால ஆவிக்குரிய ஆசீர்வாதத்திற்கும் கிறிஸ்தவ வாழ்க்கைக்கும் நமக்கு நாமே சமாதி கட்டி விடுகிறோம். இதைக் குறித்து இக்கட்டுரையின் மூலம் எப்படி இக்காரியத்தை மேற்கொள்வது என்பதை கற்றுக்கொள்வோம்.

## 1. சரீரத்தை அடக்கி ஆள வேண்டும்

மனிதனாக பிறந்த ஒவ்வொருவருடைய சரீரமும் மண்ணினாலே ஆனது. ஆனால், இந்த மண்ணான சரீரத்தை நம்மால் அநேக வேளைகளில் அடக்கி ஆள முடிவதில்லை, வாலிபர்களே, நீங்கள் நன்றாக யோசித்து பாருங்கள் "நம்முடைய பெரும்பாலான எல்லா பாவங்களும் நம்முடைய சரீரத்தை மையமாக வைத்தே சுற்றி வருகிறது" என்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

ஏதேன் தோட்டத்தில் ஏவாளும் ஆதாமும் விழுந்து போனதற்கு முதலாவது காரணம் என்னவென்று பார்த்தால் அது மாம்ச இச்சையே என்பது நன்றாக விளங்கும். சாத்தான் பாவம் செய்ய ஏவாளை தூண்டி விட்ட உடன் அவள் அந்த நன்மை தீமை அறியதக்க கனியை பார்த்த போது முதலாவது அவளுக்கு ஏற்பட்ட எண்ணம் "புசிப்புக்கு நல்லது" (ஆதி 3:6) என்று நினைத்தாள். நாமும் கூட இந்த ஆதாம் ஏவாளை போல அநேக வேளை களில் சரீரத்தை கீழ்ப்படுத்த முடியாமல் விழுந்து போய் விடுகிறோம்.

நாம் சொல்வதை சரீரம் கேட்க வேண்டும். ஆனால், அநேக நேரங்களில் சரீரத்தின் உத்தரவுகளுக்காக நாம் காத்து அடிமைகளை போல வாழ்கிறோம்.

தேவனால் முதன் முதலாக படைக்கப்பட்ட மனுஷர்களாகிய ஆதாம், ஏவாளே மாம்ச இச்சைகளை கீழ்ப்படுத்த முடியவில்லை, நான் எப்படி மேற்கொள்ளுவது? என்று கேள்வி கேட்க ஆரம்பிக்கிறோம். ஆனால், நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்து மாம்சத்தில் இருந்த நாட்களில் பிசாசினால் சோதிக்கப்பட்ட போது மாம்ச இச்சைகளை தேவனுடைய வசனத்தை மேற்கோள்காட்டி எளிதாக ஜெயித்திருக்கிறார் (மத். 4:3,4) என்பதையும் நாம் மறந்து போய் விடக்கூடாது.

வாலிபர்களே, "நீங்கள் எதற்கு கீழ்ப்படியும்படி உங்களை அடிமை களாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கி றீர்கள்" (ரோம 6:16) என்று பவுல் எச்சரிக்கிறார். நீங்கள் மாம்ச இச்சைக்கோ அல்லது கண்களின் இச்சைக்கோ கீழ்ப்படியும் போது அதற்கு நீங்கள் அடிமைகள் என்பதை மறந்து போய் விடாதீர்கள். ஆகையால் நீங்கள் ஒரு போதும் பிசாசுக்கு அடிமையாக மாறி விடக்கூடாது.

நான் என் மாம்சத்தின் இச்சைகளை என்னை விட்டு விலக்க வேண்டு மென்றால் என்ன செய்ய வேண்டும் என்று கேட்கிறீர்களா? அதற்கான பதிலை அப்போஸ்தலனாகிய பவுலே சொல்கிறார் "மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நான் தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்" (1கொரி 9:27) என்று அறிவுரை கூறுகிறார். எனவே நாம் நம்முடைய சரீரத்தை நமக்கு கீழ்ப்படுத்த வேண்டும். சரீரம் சொல்ல கூடிய பாவ காரியத்திற்கெல்லாம் நாம் செவி கொடுக்க கூடாது. நாம் என்ன சொல்லுகிறோமோ அதைத்தான் சரீரம் கேட்க வேண்டும்.

அப்போஸ்தலனாகிய பவுல் அடுத்ததாக கூறும் அறிவுரை என்னவென்றால் "கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்" (கலா 5:24) என்கிறார். அருமையான வாலிப சகோதரர்களே நீங்களும் இதை போல் இருந்தால் தான் பிரகாசமான கிறிஸ்தவர்களாக வாழ முடியும். நாமும் நம்முடைய ஆசை இச்சைகளையெல்லாம் சிலுவையில் அறைய வேண்டும். அந்த மாம்சத்தின் இச்சைகளை சிலுவையில் அறைந்து சாகடித்து விடுங்கள் என்று அப்போஸ்தலனாகிய பவுல் வலியுறுத்துகிறார்.

மேலும், "பவுல் கர்த்தராகிய இயேசுவினுடைய அச்சடையாளங்களை நான் என் சரீரத்திலே தரித்துக் கொண்டிருக்கிறேன்" (கலா 6:17) என்று எழுது கிறார். அதே போல் நாமும் கிறிஸ்துவின் அச்சடையாளங்களை நம் சரீரத்தில் தரித்துக் கொள்ள வேண்டும். நம்முடைய ஒவ்வொரு செயல் பாட்டிலும் எல்லா ஜனங்களும் நம்முடைய சரீரத்தில் கிறிஸ்துவை பார்க்க வேண்டும்.

## 2. ஆவியை அடக்கி ஆள வேண்டும்

வாலிபர்களாகிய உங்களுக்கு பரிசுத்த ஆவியானவர் தமது வசனத்தின் மூலமாக கொடுக்கும் ஆலோசனை ஆவியை (மனுஷ ஆவி) அடக்கி ஆள வேண்டும் என்பதாகும். ஏவாளும், ஆதாமும் ஆவியை

அடக்காததினால் தான் உலகமே இருளுக்குள் போய் விட்டது பாருங்கள். பிசாசினால் சோதிக்கப்பட்ட உடன் அவர்கள் நன்மை தீமை அறியதக்க கனியை பார்த்த போது "கண்களை தெளிவிக்கிறது" (ஆதி. 3:6) என்று தங்கள் உள்ளத்திலே நினைத்தவர்களாக அதைப்புசித்தார்கள், தங்களுடைய ஆவியிலே இருவரும் தாங்கள் நன்மை தீமை அறிய வேண்டும் என்றும் தேவர்களைப் போல மாற வேண்டும் என்றும் நினைத்தார்கள். ஏனென்றால், ஆவியை அடக்க அவர்களால் முடியவில்லை விளைவு நன்மை தீமையை அறிந்ததினாலே பாவமும், பாவத்தினாலே மரணத்தையும் இந்த உலகத்திற்கு கொடுத்து என்றென்றும் அழியாத நினைவுச் சின்னங்களாக இருக்கிறார்கள்.

அருமையான வாலிபர்களே! அன்றைக்கு அவர்கள் பிசாசினால் சோதிக்கப்பட்டபோது தங்கள் ஆவியை அடக்காததினால் மிகப்பெரிய விளைவுகளை மனித குலம் இன்றைக்கும் சந்திக்கிறது. அதனால்தான் இன்றைக்கு நம்முடைய பரிசுத்த வேதாகமம் "மனுஷனுடைய ஆவி கர்த்தர் தந்த தீபமாயிருக்கிறது. அது உள்ளத்தில் உள்ளவைகளையெல்லாம் ஆராய்ந்து பார்க்கும்" (நீதி. 20:27) என்று கூறுகிறது. நீங்கள் எந்த காரியம் செய்தாலும் அது தேவனுக்கு பிரியமாக இருக்குமா என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். அப்படி பார்க்காத பட்சத்தில் நாம் நிச்சயமாக தேவனுடைய கிருபையிலிருந்து விழுந்து போய் விடுவோம்.

இன்றைக்கு நீங்கள் உலகத்தை பாருங்கள், பெரும்பாலான வாலிபர்கள் குடிப்பழக்கத்திற்கும், புகைபிடிக்கும் பழக்கத்திற்கும், போதை வஸ்துகளுக்கும், விபச்சாரத்திற்கும், வேசித்தனத்திற்கும் அடிமைகளாக இருப்பதை நீங்கள் பார்க்க முடியும், இவர்கள் தங்கள் ஆவியினாலே உள்ளத்தை ஆராயவில்லை. அதனால் இதிலிருந்து மீளமுடியாமல் அடிமைப் பட்டு கிடக்கிறார்கள். இவர்களை குறித்து நீதி மொழிகளின் ஆசிரியர் "தன் ஆவியை அடக்காத மனுஷன் மதிலிடிந்த பாழான பட்டணம் போலிருக் கிறான்" (நீதி 25:28) என்று வேதனையோடு எழுதுகிறார். அதே போல் நீங்களும் உங்கள் ஆவியை அடக்கி ஆளவில்லை யென்றால் உங்கள் இருதய மெல்லாம் துன்மார்க்கத்தில் நிறைந்து இருக்கும் (மத். 7:21-23) என்று கிறிஸ்து எச்சரிக்கிறார்.

நம்முடைய ஆவியில் ஒவ்வொரு நாளும் நாம் அதிகமதிகமாக பலப்பட வேண்டும். அதற்கு தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை தரித்து கொள்ள வேண்டும் (எபே 6:11-18) என்று பவுல் வலியுறுத்துகிறார். ஆகையால், கிறிஸ்துவுக்கு பிரியமான வாலிபர்களே! நீங்கள் உங்கள் சரீரத்தையும் ஆவியையும் அடக்கி கீழ்ப்படுத்துங்கள், அப்போது உங்கள் சரீரபிரகாரமான வாழ்க்கையும் ஆவிக்குரிய வாழ்க்கையும் கிறிஸ்துவுக்குள் ஆசீர்வதாகமாக அமையும். உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் கிறிஸ்து வரும் போது குற்றமற்றதாய் காக்கப்படுவதாக. ஆமென்.

**N. பர்னபாஸ்,** திருப்பூர்.

சிறுவர் பகுதி

# வேதத்தில் உள்ள மேகங்கள்

இயேசு கிறிஸ்து வாழ்ந்த தேசமாகிய பாலஸ்தீனாவிலே, சீதோஷ்ணநிலை வருட முழுவதும் ஏறக்குறைய ஒரே மாதிரியானதாகத்தான் இருக்கும். இந்த அழகான நாடு, கிழக்கிலே பாலைவனத்தையும், மத்தியத் தரைக்கடலை மேற்கேயும் எல்லைகளாக கொண்டிருக்கிறது. கடலில் இருந்து வீசும் காற்று ஈரமானதாக இருப்பதால் பெரிய மேகங்களை உண்டு பண்ணக் கூடியதாக இருக்கும். வேதத்தை எழுதிய எழுத்தாளர்கள் இந்த மேகங்கள் மூலமாக ஆவிக்குரிய சில உண்மைகளை கொண்டுவர தேவன் அவர்களை ஏவினார். அந்த உண்மைகள் சிலவற்றை இங்கு காண்போம்.

1. பழைய ஏற்பாட்டில் பல இடங்களில் நாம் பார்க்கும்போது, தேவனுடைய மகிமை, அவருடைய பிரசன்னம் போன்றவற்றை உணர்த்த மேகங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி; நான் உன்னோடே பேசும்போது ஜனங்கள் கேட்டு, உன்னை என்றைக்கும் விசுவாசிக்கும்படி **நான் கார்மேகத்தில் உன்னிடத்திற்கு வருவேன்** என்றார் (யாத். 19:9). தேவன் இஸ்ரவேல் மக்களுக்கு 10 கட்டளைகளைக் கொடுத்த போது இடிமுழக்கங்களும், மின்னல்களும், மலையின்மேல் **கார்மேகமும்** உண்டாயிற்று. தேவனுடைய அளவுக்கதிகமான வல்லமையை இவைகள் வெளிப்படுத்துகின்றன. ஜனங்கள் எல்லோரும் நடுங்கினார்கள். நாம் அவருக்கு மரியாதை செலுத்த அவருக்கு எல்லாத் தகுதியும் உள்ளது என்ற பாடத்தை இதிலிருந்து கற்றுக்கொள்கிறோம்.

2. இஸ்ரவேல் ஜனங்கள் அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து புறப்பட்டுச் சென்ற போது தேவன் அவர்களை பெரிய மேகத்தை ஸ்தம்ப வடிவில் கொடுத்து அதன் மூலம் வழிநடத்திச் சென்றார். இதைப்பற்றி மற்றொரு வேதாகம எழுத்தாளர் கூறும் போது, **நீர் உம்முடைய மிகுந்த மன உருக்கத்தின்படியே, அவர்களை வனாந்தரத்திலே கைவிடவில்லை. அவர்களை வழிநடத்தப் பகலிலே மேகஸ்தம்பமும், அவர்களுக்கு வெளிச்சத்தையும், அவர்கள் நடக்க வேண்டிய வழியையும் காட்ட இரவிலே அக்கினி ஸ்தம்பமும் அவர்களை விட்டு விலகவில்லை** (நெகேமியா 9:19). இந்த மேகத்திலிருந்து நாம் கற்றுக் கொள்ளக்கூடிய பாடம் என்னவென்றால், நாம் கட்டாயமாக தேவனை பின்பற்ற வேண்டும். நம் வாழ்நாள் முழுவதும் அவர் தான் நமக்கு நம்பகமான வழிகாட்டியாக இருக்க வேண்டும்.

3. நோவாவின் காலத்தில் பூமியின் மேல் மகா பெரிய வெள்ளம் வந்த போது, மேகத்திலே தேவன் வில்லை வைத்தார். **நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன். அது எனக்கும், பூமிக்கும் உண்டான உடன்படிக்கைக்கு அடையாளமாயிருக்கும்** (ஆதி. 9:13). இந்த இடத்தில் வானவில்லையும், மேகத்தையும் ஒன்றாகச் சேர்த்து ஓர் அடையாளமாக வைத்தார். அவர் தம் உடன்படிக்கையை எப்போதும் காக்கிறவராயிருக்கிறார்.

4. சில நேரங்களில், தேவன் இந்த மேகத்தை நாம் அவருக்கு கீழ்ப்படியும் போது நம்முடைய பாவங்களை அப்படியே முழுவதும் அகற்றி விடுதலுக்கு ஒப்பாகப் பேசுகிறார். ஏசாயா தீர்க்கதரிசி, **உன் மீறுதல்களை மேகத்தைப் போலவும், உன் பாவங்களைக் கார்மேகத்தைப் போலவும் அகற்றி விட்டேன் என்கிறார்.** (ஏசாயா 44:22). எல்லா ஜனங்களும் நன்மை, தீமை அறியும் வயது வந்தவுடன் தேவனுடைய கட்டளையை மீறுகிறார்கள். தேவனுடைய பிரமாணத்தை மீறினால் அது **பாவம்** (1 யோவான் 3:4). ஆனாலும் தம்முடைய குமாரனை மரிக்கச் செய்ததினால் தேவன் நமக்கு ஒரு மீட்பின் திட்டத்தை ஏற்படுத்தினார். இத்திட்டத்திற்கு கீழ்ப்படியும் போது நித்திய இரட்சிப்புக்கு சொந்தமாகிறோம். (எபி 5:8-9). இந்த மன்னிப்பு என்பது திரண்ட மேகத்தைப் போன்று நம்மேல் இருந்து நம்முடைய பாவங்களை மூடிப்போகிறது. இது நமக்கு எவ்வளவு ஒரு ஆறுதலான விஷயம்.

5. பாலஸ்தீன சேத்திலே விடியற்காலத்திலே மேகம் தோன்றி, கொஞ்சம் கெஞ்சமாக மத்தியானத்திற்குள் காணாமல் போய் விடும். காரியங்கள் நம்மை விட்டு கடந்து சென்று விடுகிறது என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. நீதிமானாக வாழ்ந்து தேவனை ஆராதித்து வந்த பக்தன் யோபு மிகப்பெரிய செல்வந்தனாக இருந்தான். ஆனால், சாத்தான் யோபுவை பல வகைகளிலும் சோதிக்கும்படி தேவன் அனுமதித்து விட்டார். அவனுக்கிருந்த எல்லாம் அவனை விட்டுப் போய்விட்டது. **என் சுகவாழ்வு ஒரு மேகத்தைப் போல் கடந்து போயிற்று** (யோபு 30:15) என்கிறான். சரீர பிரகாரமான காரியங்களில் அதிகமான நம்பிக்கை வைக்காமலிருப்பது மிக, மிக சிறந்தது. பரலோக காரியங்களுக்காக நம் வாழ்க்கையை அர்ப்பணித்து நம்மை சிருஷ்டித்தவருக்கு உண்மையான ஆராதனை செய்வதே புத்தி சாலித்தனமான செயலாகும். **பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம்** (மத். 6:19) என்று இயேசு கிறிஸ்து கூறுகிறார்.

6. சில சமயங்களில் இந்த மேகங்கள் நம் சிருஷ்டிகளின் அளவுக்கதி கமான, வியக்கத்தக்க வல்லமையை விவரிக்கிறதாயிருக்கிறது. யோபுவிடம் ஒரு மனிதன், **மேகங்கள் தொங்கும்படி வைக்கும் நிறையையும், பூரண ஞானமுள்ளவரின் அற்புதமான செய்கைகளையும்** (யோபு 37:16). கிறிஸ்துவுக்கு பல நூற்றாண்டுகள் முன்பு வாழ்ந்த யோபுவுக்கு தேவன் எப்படி மேகங்களை தொங்க வைத்திருக்கிறார் என்பது புரியாமல் இருந்திருக்க வாய்ப்புள்ளது. தண்ணீரை தனக்குள்ளே வைத்திருக்கிற மேகம் எப்படி தொங்கிக் கொண்டுள்ளது? முக்கியமான காரணிகளான ஈர்ப்பு விசை, நீர்த்துளிகளின் அளவு, காற்றின் அடர்த்தி போன்றவைகளால் ஒன்றுக் கொன்று சரி நிலையில் வைத்து மேகங்கள் தொங்கிக் கொண்டிருக்க உதவி செய்கிறது. இப்படி தேவனுடைய அதிசயங்களைப் பார்க்கும் போது அவைகள் எண்ணிலடங்காதவைகள்!.

ஆம், என் அருமை தம்பி, தங்கைகளே, மேகங்களை எடுத்துக் காட்டாக வைத்து பெரிய உண்மைகளை கற்றுக் கொள்ளும்படி நம் அன்பான தேவன் நமக்கு உதவி செய்தார். இந்த உண்மைகளை மறவாமல் நம் வாழ்வில் கடைபிடித்து தேவனுடைய எதிர்காலத்தில் சிறந்த கிறிஸ்தவர்களாக வாழ்வோம்!

**ஏபில் ரோஜர் நாயகம்**

# விசுவாசத்தின் அடிப்படைகள்

இந்த மாதத்தில் இந்த தொடரில் ஐந்தாம் பாடத்தைத் தொடங்க இருக்கிறோம். நாம் விவரமாக ஆராயப்போகிற முக்கியக் கருத்துக்களைப் பற்றிய சுருக்கமான புறக்குறிப்பை நாம் காணலாம்.

## சபை வரலாற்றின் ஒரு சுருக்கமான ஆய்வு

ஐந்தாம் பாடத்தின் புறக்குறிப்பு

1. கிறிஸ்துவின் ஒன்றான மெய் சபையைப் பற்றி நாம் இதுகாறும் படித்த காரியங்களை மறுபடியும் பார்ததல்.
2. புதிய ஏற்பாட்டில் நாம் பார்க்கிறவைகளோடு இன்றைய நாட்களில் காணப்படும் மத உலகை நாம் ஒப்பிடுதல்.
3. இந்த பாடத்தை நாம் நடத்துவதில் நம்முடைய மனநிலை
4. விசுவாசத்தை விட்டு விலகிச் செல்லுதலைப் பற்றிய புதிய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள், புதிய ஏற்பாட்டு மாதிரி
5. தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டபடியே வழி விலகிச் செல்லுதல் நிறைவேறியது.
6. கி.பி. 606 லிருந்து 1520 கி.பி. வரை வரலாறு
7. சீர்திருத்தம் (கி.பி. 1521 லிருந்து 1600 வரை)
8. இந்த வரலாற்றிலிருந்து பாடங்கள்

இப்போது ஒரே நேரத்தில் இந்தக் கருத்துக்களை நாம் விவரமாகப் பார்க்கலாம்.

**1. கிறிஸ்துவின் ஒன்றான மெய் சபையைப் பற்றி நாம் இதுகாறும் படித்த காரியங்களை மறுபடியும் பார்த்தல்.**

இதுகாறும் நாம் புதிய ஏற்பாட்டு சபையைப் பற்றி கீழ்காணும் காரியங்களை நாம் படித்திருக்கிறோம்.

A. பெந்தெகொஸ்தே நாளிலே கி.பி. 30ல் எருசலேமில் சபை ஸ்தாபிக்கப்படுதல்.

B. அந்த சபை இன்றும், என்றும் நிலைத்திருத்தல்

C. எளிமையான ஆளுகை அமைப்பு உட்பட அந்த ஒன்றான மெய் சபையை அடையாளம் கண்டு கொள்வதற்கான வேதாகம வழிகள்.

1. கிறிஸ்து தலையாயிருக்கிறார். அதன் அர்த்தம் என்னவென்றால் அவருடைய சபைக்கு மனித தலைவர்களோ பூமிக்குரிய தலைமையகமும் இல்லை.
2. ஆகவே, ஒவ்வொரு பிராந்திய சபையும் சுயச்சார்புள்ளதும் சுய ஆளுகை உடையதுமாயிருக்கிறது.

3. ஒவ்வொரு பிராந்திய சபையும் மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களும் இருக்க அதாவது அந்த பொறுப்பில் இருக்க அதிகாரம் பெற்றிருக்கிறது.

4. அந்த கிறிஸ்துவின் ஒன்றான மெய்சபையை அடையாளம் கண்டு கொள்வதற்கான நித்திய முக்கியம் மேலும் அந்த சபையில் அங்கத்தினராக இருப்பதன் நித்திய முக்கியம். ஒருவர் தன்னுடைய பாவங்களிலிருந்து இரட்சிக்கப்பட்டு தேவனோடு நித்தியத்தை செலவழிக்க வேண்டுமென்றால் அந்த ஒன்றான மெய் சபையாகிய கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினராக இருக்க வேண்டும்.

## 2. புதிய ஏற்பாட்டில் நாம் பார்க்கிறவைகளோடு இன்றைய நாட்களில் காணப்படும் மத உலகை நாம் ஒப்பிடுதல்.

இன்று மத உலகில் நாம் காணும் நிலைமையை புதிய ஏற்பாட்டில் நாம் காண்கிறவைகளோடு ஒப்பிட்டு பார்க்க வேண்டும். நாம் அப்படிச் செய்யும் போது, குறைந்தது ஒரு பெரிய வித்தியாசத்தையாவது காண முடியும். அதாவது, இன்று புதிய ஏற்பாட்டு காலக்கட்டத்தில் இல்லாத முன்னூறுக்கும் மேற்பட்ட மார்க்கப் பிரிவினை சபைகள் இருப்பதை நாம் காண முடியும் இந்த மதக் கூட்டங்கள் எல்லாம் தாங்களும் இயேசுவைத்தான் பின்பற்று கின்றன என சொல்லிக் கொள்கின்றன. நாம் ஏற்கனவே பார்த்திருக்கிறபடி இந்த கூட்டங்கள் மிக முக்கியமானவைகளாகிய பாவ மன்னிப்பு, தேவனுக்கு சரியான ஆராதனையை ஏறெடுத்தல், சபை ஆளுகை அமைப்பு போன்ற வைகளைப் பற்றி வித்தியாசமான உபதேசங்களைப் போதித்து வருகிறார்கள்.

இந்த நிலைமை எப்படி வளர்ந்தது அதற்கான காரணங்கள் என்ன என்பதை படிப்பது நமக்கு ஒரு படிப்பினையாகவும், உதவிகரமாகவும் அமையும் பிரச்சனைகள் எங்கே எப்போது எழுந்தது என்பதை அறிந்து கொள்வதற்காக இவைகளை நாம் படிக்க வேண்டும். அவர்கள் செய்த தவறை நாம் திரும்ப செய்யாமல் அவைகளை செய்யாமல் தவிர்க்க இவைகளை நாம் அறிந்து கொள்ளுவது அவசியமாயிருக்கிறது.

## 3. இந்த பாடத்தை நாம் நடத்துவதில் நம்முடைய மனநிலை :

நாம் ஒன்றாகச் சேர்ந்து படிப்பில் ஈடுபடும் போது நம்முடைய மனநிலை எப்படி இருக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். நம்முடைய பாடம் அன்பின் ஆவியிலும், சத்தியத்தை போதிப்பதற்கு உள்ள உண்மையான விருப்பத்துடனும் நடத்தப்படுகிறது. அதில் கர்த்தருக்கான தீவிர அன்பும் உங்களுக்கான தீவிர அன்பும் உள்ளடக்கமாகும்.

இயேசு சொன்னது உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? யோவான் 14:15யை வாசியுங்கள் நீங்களும், நானும் இயேசுவை நேசிக்கிறோம் என்று சொல்வது போதுமானதல்ல! நம்முடைய அருமை இரட்சகருடைய வார்த்தைளின்படி அவருக்கான அன்பை நீங்களும், நானும் எப்படி காட்ட வேண்டும்? நாம் இயேசுவினிடத்தில் உண்மையிலேயே அன்பாயிருந்தால் நம்முடைய முழு பலத்தோடு அவருடைய கற்பனைகளை கைக்கொள்ள நாம் பாடுபட வேண்டும். அவருடைய கற்பனைகள் எல்லாம் புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

யோவான் 15:14ல் நாம் பார்க்கும் போது மறுபடியும் நாம் இயேசுவுக்கு சிநேகிதராயிருக்கிறோம் என்று சொல்வது மாத்திரம் போதுமானதல்ல! நாம் அவருடைய கற்பனைகளை கைக்கொள்ள ஜாக்கிரதையாக பாடுபட்டால்தான் நீங்களும் நானும் அவருடைய உண்மையான சிநேகிதராயிருக்க முடியும்.

யோவான் 17:20,21 வசனங்களை நாம் வாசிக்கும் போது இயேசு அந்த நாளில் தன்னோடிருந்த அப்போஸ்தலர்களுக்காக மாத்திரம் ஜெபிக்க வில்லை. அப்போஸ்தலர்களுடைய வார்த்தையினால் தன்னில் விசுவாசம் வைப்பவர்களுக்காகவும் ஜெபித்தார். அதில் நீங்களும், நானும் உள்ளடக்கம்!.

எனவே, இயேசு உங்களுக்காகவும், எனக்காகவும் ஏன் ஜெபித்தார்? தேவ ஆட்டுக்குட்டி அவரில் விசுவாசம் வைப்பவர்கள் எல்லோரும் ஒன்றாயிருக்கும்படி ஜெபித்தார் அதாவது நாம் ஒன்றாயிருக்கும்படி ஜெபித்தார்.

இயேசுவைப் பின்பற்றுபவர்கள் எப்படி ஒற்றுமையாக இருக்க வேண்டும் என இயேசு ஊக்கமாக ஜெபித்தார்? நாம் பிதாவும், இயேசுவும், ஒன்றாயிருப்பது போல ஒன்றாயிருப்பதற்கு பாடுபட வேண்டும்! பிதவும், இயேசுவும் எப்படி ஒற்றுமையாயிருந்தார்கள். அவர்கள் ஒரே காரியத்தை விசுவாசித்தார்கள், போதித்தார்கள், செய்தார்கள்.

அதே விதமாக நீங்களும், நானும் இயேசுவின் ஜெபத்தை நிறைவேற்றுவதற்கு ஒரே காரியத்தை விசுவாசிக்கவும், போதிக்கவும், செய்யவும் வேண்டும்!. நாம் அதை எப்படிச் செய்ய முடியும்? நாம் தேவனுடைய வார்த்தையில் பார்த்திருக்கிறபடி நீங்களும் நானும் தேவன் புதிய ஏற்பாட்டில் என்ன கட்டளையிட்டிருக் கிறாரோ அதை மாத்திரம் விசுவாசிக்கவும், போதிக்கவும் செய்யவும் வேண்டும். நாம் எந்த விதத்திலும் தேவனுடைய வார்த்தையில் ஒன்றைக் கூட்டவோ, குறைக்கவோ கூடாது. தேவனுடைய வார்த்தையை நாம் ஏதாவது விதத்தில் மாற்றினால் தேவனுக்குப் பிரியமான வகையில் நாம் ஒன்றாயிருக்க முடியாது!.

இயேசு கிறிஸ்து என்ன ஜெபித்தாரோ அதன்படி இத்தகைய ஒற்றுமை ஏன் முக்கியமானது? இப்படிப்பட்ட ஒற்றுமையை நாம் அடையும் போது மட்டுமே இந்த உலகத்தில் அநேகர் தேவன் இயேசுவை இந்த உலகத்திற்கு இரக்கத்தின் ஊழியத்திற்காக அனுப்பினார் என்பதை விசுவாசிப்பார்கள்!

பிரியமானவர்களே இந்த உலகத்தில் உள்ள மக்கள் நூற்றுக்கணக்கான வித்தியாசமான சபைகள் தாங்களும் கிறிஸ்துவை பின்பற்றுவதாக சொல்லிக் கொண்டு ஆனால் வித்தியாசமான காரியங்களை விசுவாசிப்பதையும், போதிப்பதையும், செய்வதையும் காணும் போது அது அவமான மாயிருக்கிறது. தேவனுடைய நாமத்திற்கு இது தூஷணமாயிருக்கிறது இப்படிப்பட்ட மதப்பிரிவினைகளால் நாம் தேவனுடைய நாமத்தை மகிமைப் படுத்துகிறதில்லை. மாறாக இந்த உலகத்தில் உள்ள மக்கள் இயேசுவை விசுவாசிக்காததற்கு நாம் ஒரு காரணத்தைக் கொடுக்கிறோம். பிரியமான வர்களே! காரியங்கள் இப்படியாக இருக்கக்கூடாது! நாம் கிறிஸ்துவின் புதிய ஏற்பாடாகிய உறுதியான அஸ்திபாரத்தில் ஒன்றாயிருக்க வேண்டும்.

மத்தேயு 15:13யை வாசியுங்கள் இந்த வசனத்தில் நாம் ஏற்கனவே பார்த்தது போல, இயேசு கள்ள மத அமைப்புகளைப் பற்றி தான் பரமப்பிதா நடாத நாற்றுகள் என்று சொல்கிறார். நம் மீட்பர் சொன்னது அன்றும் உண்மை யாயிருந்தது இன்றும் உண்மையாய் இருக்கிறது! இப்படிப்பட்ட கள்ள மத அமைப்புகளை தேவன் இறுதியில் பிடுங்கிப்போடுவார். தெளிவாகவே நம்முடைய அருமை இரட்சகர் கிறிஸ்துவின் ஒன்றான மெய் சபையில் இல்லாமல் மற்ற சபைகளில் இருக்கிறவர்கள் தேவனிடத்திலிருந்து நித்தியமாகப் பிரிந்து நரக அக்கினி ஜுவாலையில் காணப்படுவார்கள் என்று கூறுகிறார்.

தயவு செய்து தேவன் தன்னால் ஏவப்பட்ட தீர்க்கதரிசியாகிய யூதா மூலமாக என்ன சொல்கிறார் என்று கவனியுங்கள். யூதா மூன்றாவது வசனத்தை வாசியுங்கள். இந்த வசனத்தில் தேவன் நீங்களும், நானும் இயேசு கிறிஸ்துவின் புதிய ஏற்பாடாகிய விசுவாசத்திற்காகப் போராட வேண்டும் என்று கட்டளையிடுகிறார். அதன் அர்த்தம் என்னவென்றால் நீங்களும், நானும் சத்தியத்திற்காக நின்று ஒவ்வொரு கள்ள உபதேசத்தையும், சபையையும் வெளியரங்கப்படுத்த வேண்டும. தேவனுக்கு கீழ்ப்படிய நாம் அப்படிச் செய்ய வேண்டும். சாத்தானின் நரகத்திலிருந்து ஜனங்களை இரட்சித்து தவறான சபைகளிலிருந்து அவர்களை அழைத்து கிறிஸ்துவின் ஒன்றான மெய்சபையில் அவர்களை இருக்க செய்ய வேண்டும்.

தயவு செய்து பிரியமான அப்போஸ்தலனாகிய பவுலின் ஏவப்பட்ட வார்த்தைகளை ஆழமாக தியானம் செய்யுங்கள் (1 கொரிந்தியர் 1:10-13) வசனங்களை வாசியுங்கள். இந்த வசனங்களில் தேவன் பவுல் மூலமாக கொரிந்து பட்டணத்தில் இருந்த கிறிஸ்தவர்களை கண்டித்தார். தேவன் ஏன் அப்படிச் செய்தார்? கொரிந்து பட்டணத்தில் பிரிவினைகளும், வாக்குவாதங் களும் இருந்த படியால் தேவன் அப்படிச் செய்தார்! அவர்கள் பிரிவுகளாப் பிரிந்து பவுல், அப்பல்லோ, கேபா போன்ற மனிதர்களைப் பின்பற்றினார்கள். அப்போது தேவன் இப்படிப்பட்ட பாவ நடத்தையை கண்டித்தார். இன்றும் இப்படிப்பட்ட செயலை தேவன் இந்த நிரூபம் மூலமாக கண்டிக்கிறார். இது எப்படி மார்ட்டின் லூதர், ஜான் ஸ்மித், ஜான் கல்வின், ஜான் வெஸ்லி போன்றோர் தொடங்கிய சபைகளில் இருப்பது எப்படித் தவறோ அதேப் போன்ற தவறாகீத்தான் இருக்கிறது இதை நாம் நம்முடைய நான்காம் பாடத்தில் படித்தோம்.

தயவு செய்து தேவன் பவுல் மூலமாக கேட்கும் உருவக்குத்துகின்ற கேள்வியைக் கவனியுங்கள். முதலாவது கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? பிரியமானவர்களே இந்தக் கேள்விக்கு என்ன பதில்? கிறிஸ்து பிரிந்திருக்க வில்லை என்ற பதில் உங்களுக்குத் தெரியும்! அப்படியென்றால் தேவன் அந்தக் கேள்வியை ஏன் கேட்டார்? அவர்களுக்கும், உங்களுக்கும், எனக்கும் கிறிஸ்துவைப் பின்பற்றுவர்களாகிய நாம் மனிதர்களைப் பின்பற்றுகிற பிரிவுகளாகப் பிரிந்திருக்கக்கூடாது என்பதை சுட்டிக்காட்டுவதற்காக தேவன் அந்தக் கேள்வியைக் கேட்டார்.

தேவனுடைய இரண்டாவது மற்றும் மூன்றாவது கேள்விகளை கவனியுங்கள்; "பவுலா உங்களுக்காக சிலுவையிலறையப்பட்டான்? பவுலின் நாமத்தினாலேயா ஞானஸ்நானம் பெற்றீர்கள்? நிச்சயமாகவே இரண்டு கேள்விகளுக்கான பதிலும் இல்லை என்பதே!" ஆனால் இந்தக் கேள்விகளை இன்று மத உலகோடு நாம் பொருத்திப் பார்க்க வேண்டும். தவறான மதக்கூட்டத்தை உருவாக்கிய மார்ட்டின் லூதர் அல்லது வேறு எந்த மனுஷனாவது உங்களுக்காக சிலுவையிலறையப்பட்டானா? அல்லது மார்ட்டின் லூதரின் நாமத்தினாலேயா ஞானஸ்நானம் பெற்றீர்கள்? மறுபடியும் அந்தக் கேள்விக்கான விடை உங்களுக்கு தெரியும். எனவே நாம் தேவனுக்குப் பிரியமாயிருக்க, இயேசுவின் ஒன்றான மெய் சபையாகிய கிறிஸ்துவின் சபையில் இருக்க வேண்டும்!

நீங்கள் அந்த சபையில் அங்கத்தினராக இருக்கிறீர்களா? இல்லையென்றால் அந்த சபையில் ஞானஸ்நானம் பெறுவதற்கு உங்களுக்கு எது தடையாக இருக்கிறது (அப். 8:36; 22:16).

கர்த்தருக்கு சித்தமானால் அடுத்த மாதம் இந்த பாடத்தை நாம் நடத்துவதில் நம்முடைய மனநிலை என்கிற தலைப்பில் இன்றும் அநேக வசனங்களைப் பார்ப்போம். மேலும் புதிய ஏற்பாட்டு மாதிரியிலிருந்து நடைபெறவிருக்கும் வழிவிலகிச் செல்லுதல் பற்றி தேவன் புதிய ஏற்பாட்டில் பதிவு செய்திருக்கிற ஆச்சரியமூட்டும் தீர்க்கதரிசனங்களை நாம் காணலாம். விசுவாசமாகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திலிருந்து மனிதர்கள் எப்படியாக வழிவிலகிச் செல்வார்கள் என்பதை விவரமாக முன்னறிவித்திருக்கிறார். நாம் ஒன்றாக சேர்ந்து அந்த தீர்க்கதரிசனங்களைப் படிக்கும் போது நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள் என்று நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன்.

***Charlie Dipalma*** ***Benny Martin***

## நாளும் நடப்பும்

1. செவ்வாய் கோளில் பனிச்சரிவு ஏற்படுவதாக நாசா விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.
2. மனிதர்களைப் போலவே சுறா மீன்களும் ஆழ்கடலில் இரை தேடுவதாக விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.
3. புதுவை மற்றும் தமிழகத்தை சேர்ந்த சுமார் 5,93,306 மாணவ, மாணவியர் தேர்வு எழுதுகின்றனர்.
4. பாகிஸ்தானில் லாகூரில் அடுத்தடுத்து குண்டு வெடிப்பு 32 பேர் பலி.
5. விடுதலைப்புலிகள் மீதான ராணுவ நடவடிக்கை தொடரும். இலங்கை அதிபர் திட்டவட்ட அறிவிப்பு.
6. ஆவின் பால் விலை லிட்டருக்கு ரூ. 2 உயர்வு.
7. முதுமலை வனச் சரணாலயம் தொடர்ந்து நிலவும் வறட்சியின் காரணமாக மே மாதம் 31ம் தேதி வரை மூடப்படுகிறது.
8. கிரிக்கெட் : முதன் முதலாக ஆஸ்திரேலியாவில் தொடரை வென்று இந்தியா வரலாற்றுச் சாதனை

# இரத்த சாட்சிகள்

தொடர் கட்டுரை

## பாடம் - 7. அல்பேயுவின் குமாரன் யாக்கோபு

பரிசுத்த வேதாகமத்தில் யாக்கோபு என்ற பெயர் மிகவும் பிரசித்தி பெற்றதாக உள்ளதை வேதத்தை படிக்கும் ஒவ்வொருவரும் அறிந்துள்ளனர். தேவன் வாக்குமாறாதவர் என்றும் தம்முடைய வாக்குத்தத்தை நிறைவேற்றக் கூடியவர் என்றும் பழைய ஏற்பாட்டின் வரலாறு தெரிவிக்கிறது. எனவே தான் தேவன் அப்போதுள்ள இஸ்ரவேலர்களிடம் நான் ஆபிரகாமின் தேவனென்றும், ஈசாக்கின் தேவனென்றும், யாக்கோபின் தேவனென்றும் சொல்லி இருக்கிறார் (லூக்கா 20:37) ஆகையால், யாக்கோபின் பெயர் அனைவராலும் அறியப்பட்டது. மேலும் ஏசாயா தீர்க்கதரிசி சபையைக் குறித்து தீர்க்கதரிசனம் உரைக்கப்படும் போது..... கர்த்தரின் பர்வதம் என்றும் யாக்கோபின் தேவனுடைய ஆலயம் என்றும் உரைத்தார் (ஏசா 2:3) எனவே யாக்கோபு என்ற பெயர் பிரசித்திப் பெற்றதாக இருக்கிறது.

வேதாகமத்தில் இப்பெயரையுடையவர்கள் நான்கு பேர்கள் சொல்லப் பட்டுள்ளது. ஆனால் ஆங்கல வேதாகமத்தில் மட்டும் ஈசாக்கின் குமாரன் யாக்கோபுவை ஜேக்கப் என்று சொல்லப்படுகிறது மற்ற செபதேயுவின் குமாரன் யாக்கோபு இயேசுவின் சகோதரன் யாக்கோபு மற்றும் அல்பேயுவின் குமாரன் யாக்கோபு ஆகியோரை ஆங்கில வேதாகமத்தில் ஜேம்ஸ் என்று சொல்லப்பட்டுள்ளது (மத். 10:2,3, 13:55).

### I. அல்பேயுவின் குமாரன் யாக்கோபு வாழ்க்கைக்குறிப்பு

இவர் இயேசுவால் தெரிந்து கொள்ளப்பட்ட 12 அப்போஸ்தலரில் ஒருவர் கலிலேயா நாட்டிலுள்ள கப்பர் நகூம் ஊரைச் சேர்ந்தவர். இவரது தந்தை அல்பேயு, தாய் மரியாள். இவர் சகோதரன் மத்தேயு மற்றும் யோசேப்பு. மேலும் சலோமி என்ற சகோதரியும் உண்டு என்று தெரிகிறது. இவர் லேவி கோத்திரத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம் (மாற்கு 2:14). ஆனால் இவரோ, மத்தேயுவோ இக்கோத்திரத்திற்கு மதிப்பு கொடுக்கும் ஆசாரிய ஊழியத்தை செய்யவில்லை, மாறாக மத்தேயு வரி வசூலிப்பவராகச் சென்று விட்டார். இவர் ரோம சாம்ராஜ்யத்தை எதிர்க்கும் தீவிரவாத இயக்கத்தில் இருந்ததாகத் தெரிகிறது. பாலஸ்தீனாவை ரோமர்களிடமிருந்து விடுவிப்பதற்கு இந்த இயக்கத்தில் இருந்துள்ளார். காலப்போக்கில் தீவிர வாதத்தை வெறுத்து அந்த இயக்கத்திலிருந்து வெளியேறி பக்தியுள்ள யூதர்களிடத்தில் சேர்ந்து ஐக்கியமாக இருந்ததாகத் தெரிகிறது. மேசியாவுக்காக விசுவாசத்துடன் காத்திருந்ததாகத் தெரிகிறது. இவர் தோற்றத்தில் இயேசுவைப் போலிருந்ததாக சொல்லப்படுகிறது. இதன் காரணமாகத்தான் யூதாஸ் இயேசுவை முத்தத்தினால் காட்டிக் கொடுத்திருக்கலாம் இவர் தீவிரவாத இயக்கத்தில் இருந்தபடியால் இவரிடத்தில் வெறுப்புணர்வு காணப்

பட்டபடியால் திருமணத்தில் நாட்டமில்லாமல் ஒரு துறவிபோல வாழ்ந்து வந்ததாகத் தெரிகிறது. இவரை சின்ன யாக்கோபு என்றும் அநேகரால் சொல்லப்படுவதுண்டு.

## II. யாக்கோபுவின் ஊழியம் மற்றும் இயேசுவைப் பின்பற்றிய விதம்

இவர் இயேசுவைப் பின்பற்றிய விதத்தைக் குறித்து வேதத்தில் சொல்லப்படவில்லை. ஆனால் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தான் மேசியா என்பதை விசுவாசித்திருக்கின்றார். தனது சகோதரன் மத்தேயு இயேசுவைப் பின்பற்றிய பொழுது அவர் விருந்துவைத்து மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டார் (மத். 9:9,10) அச்சமயத்தில் மத்தேயு இயேசுவை யாக்கோபு விடத்தில் அறிமுகப்படுத்தியிருக்கலாம் அல்லது ஆயத்துறையில் மத்தேயுவை இயேசு அழைத்த சமயத்தில் யாக்கோபுவையும் அழைத்திருக்க லாம். இயேசுவின் அழைப்பை உடனே ஏற்றுக்கொண்டு அவரைப் பின்பற்றினார். இயேசுவின் அழைப்பில்லாமல் அவர் அப்போஸ்தலனாக இருந்திருக்கமாட்டார். ஏனென்றால், அப்போஸ்தலன் என்ற கிரேக்க வார்த்தைக்கு ஒருவரால் அழைக்கப்பட்டு அனுப்பப்படுகிறவர் என்பதாகும்.

அடுத்ததாக, யாக்கோபுவின் ஊழித்தைக் குறித்து பார்க்கும் பொழுது வேதத்தில் இந்த அல்பேயுவின் குமாரனுடைய (யாக்கோபு) ஊழியம் பற்றிய தகவல்கள் இல்லை. முதல் நூற்றாண்டில் அப்போஸ்தலர்கள் எருசலேமை விட்டு சிதறடிக்கப்பட்டனர். அப்பொழுது பேதுரு மட்டும் எருசலேமில் இருந்துள்ளார். இவரோடு கர்த்தருடைய சகோதரன் யாக்கோபுவும் உடன் இருந்துள்ளார். (கலாத் 1:18,19) இந்த யாக்கோபு ஒருவேளை அல்பேயுவின் குமாரனாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. கர்த்தருடைய சகோதரன் என்பதாலே இயேசுவின் சகோதரன் என்று அர்த்தங் கொள்ளலாம். ஆனால், யாக்கோபு யூதர்கள் மத்தியிலே ஊழியம் செய்தாகச் சொல்லப்படுகிறது. முக்கியமாக எருசலேமில் ஊழியம் செய்தார் என்று ஊர்ஜிதப்படுகிறது.

முதல் நூற்றாண்டில் அப்போஸ்தலர்கள் மூன்று குழுக்களாக செயல்பட்டதாக நம்பப்படுகிறது. இதை டேவிட் ரோப்பர் என்ற பேராசிரியரும் வலியுறுத்தியிருக்கிறார். முதல் குழுவின் வழி நடத்துனர் பேதுரு அவருக்கு கீழே அந்திரேயா, யாக்கோபு, யோவான். இரண்டாம் குழுவின் வழி நடத்துனர் பிலிப்பு அவருக்குக் கீழே பர்த்தொலொமேயு தோமா, மத்தேயு. மூன்றாம் குழுவின் வழி நடத்துனர் அல்பேயுவின் குமாரன் யாக்கோபு அவருக்குக் கீழே ததேயு, செலோத்தே எனப்பட்ட சீமோன் மற்றும் யூதாஸ்க்கு பதிலாக தேர்ந்தெடுக்கப்பட்ட மத்தியா நாம் படித்துக் கொண்டிருக்கும் அல்பேயுவின் குமாரன் யாக்கோபு அப்போஸ்தலர் ஊழியத்தில் முக்கிய நபராக திகழ்ந்திருக்கிறார் என்று இதன் மூலமாக அறிகிறோம்.

## III. யாக்கோபுவின் இரத்த சாட்சி

அல்பேயுவின் குமாரன் யாக்கோபு தனது இனமான இஸ்ரவேலர் இரட்சிக்கப்பட வேண்டும் என்று விரும்பியதால் தன்னுடைய ஊழியத்தை எருசலேம் நகரில் செய்து வந்தார். எருசலேம் முழுவதும் யூத மதத் தலைவர்

களான பரிசேயர்கள், சதுசேயர்கள், ஆலோசனை சங்கத்தார்கள் மற்றும் பிராதன ஆசாரியன் ஆகியோரால் ஆளப்பட்டிருந்தது. இவர்கள் நடுவிலே மகாதைரியமாக யாக்கோபு இயேசுவை கிறிஸ்து என்று பிரசங்கித்து வந்திருக்கின்றார்.


பேதுருவும், யோவானும் எருசலேமில் பிரசிங்கித்துக் கொண்டிருந்த போது யூத மதத்தலைவர்கள் ஒன்று கூடி அவர்களுக்கு விரோதமாக செயல்பட்டு அவர்களைச் சிறையில் அடைத்துப் போட்டது போல (அப். 4:1-3) யாக்கோபுவையும் பொதுவான சிறையில் அடைத்தனர்! யூதர்கள் இவரை பல கொடுமைகள் செய்தனர். பேதுரு, யோவானை எப்படி அடித்து அவமானப்படுத்தி இயேசுவைக் குறித்து பிரசங்கிக்கக் கூடாது என்று கட்டளையிட்டு விடுதலை செய்தார்களோ (அப். 5:40) அதே போல யாக்கோபுவையும் அவமானப்படுத்தி இயேசுவைப் பற்றி பிரசங்கிக்க கூடாது என்று கட்டளையிட்டு மீறினால் கொலை செய்யப்படுவீர் என்று மிரட்டி விடுவித்தனர். ஆனால், அல்பேயுவின் குமாரன் யாக்கோபு அஞ்சாமல் யூதர்களுடைய பயமுறுத்தல்களுக்குப் பயப்படாமல் தொடர்ந்து (எருசலேமை விட்டுப் போகாமல்) அங்கேயே சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்துக் கொண்டிருந்தபடியால் யூத மதத் தலைவர்கள் எவ்வாறு ஸ்தேவானுடைய பிரசங்கத்தைக் கேட்டு உரத்த சத்தமாய்க் கூக்குரலிட்டுத் தங்கள் காதுகளை அடைத்துக் கொண்டு ஒருமனப்பாட்டு அவன்மேல் பாய்ந்து அவனை நகரத்துக்குப் புறம்பேத் தள்ளி அவனைக் கல்லெறிந்தது போலவே (அப். 7:57-58) அல்பேயுவின் குமாரன் யாக்கோபுவை யூதர்கள் கல்லெறிந்து கொன்றதாகச் சொல்லப்படுகிறது. இவர் தன்னுடைய இனத்தாருக்காகவே எருசலேமில் ஊழியம செய்து தன்னுடைய இனத்தாரலே கல்லெறிந்து இரத்த சாட்சியாகக் கொல்லப்பட்டார்! இவரை பக்தியுள்ளவர்கள் எருசலேமிலே அடக்கம் செய்தாக நம்பப்படுகிறது.

(தொடரும்)

**K. பாஸ்கர், சிறுமுகை**

**எபிரெயர் 2ம் அதிகாரத்தில் மனிதன் திரும்பப் பெற்றவை (எபி. 2:7,8,15)**

- ❋ கனமும் மகிமையும்
- ❋ தேவ சாயல்
- ❋ கிறிஸ்துவின் மூலம் தேவனுடன் உறவு
- ❋ தேவனுடைய இரக்கம்
- ❋ கிறிஸ்துவினால் அதிகாரம் மீண்டும் கிடைத்தது.



# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |

Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Literatures

ALL OF THESE PROGRAMMES ARE SPONSERED BY THE CHURCH OF CHRIST

Registered News Paper RNI No. 47661/87 - New Delhi
Postel Registration No. Erode / 26 / 2006 - 2008
Posted at Erode HPO on 20 th or 21 st of Every Month

## திருமறை ஆசான் இதழ் ஆசிரியரின் திருமறை தியானம் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

தமிழன் TV சனி காலை 7:15 மணி
தமிழன் TV ஞாயிறு இரவு 9:45 மணி
தமிழன் TV திங்கள் காலை 6:30 மணி

## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

## Advanced Bible Correspondence Course

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு **ஏழு** பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட **100** பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு
ரூ. 50/- மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

எங்களிடம் ஏற்கனவே அஞ்சல் வழிக்கல்வி BASIC BIBLE COURSE படித்து முடித்தவர்களும், படிப்பவர்களும் இதில் சேர்ந்து பயன்பெறலாம்.

இயக்குனர்,

**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
**த.பெ. எண் - 27, காங்கேயம் - 638 701.**
**தமிழ்நாடு. இந்தியா.**

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam. Ph : 04257 - 222955, 222555